பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | மாசி 05 | சனிக்கிழமை 17.02.2018 | கதிர் 104

## இந்திய விஜயத்தை கைவிட்டார் ரணில்!

கொழும்பு, பெப்.17

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்ப நிலையால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாளை மறுதினம் திங்கட்கிழமை மேற்கொள்ளவிருந்த இந்தியாவுக்கான பயணத்தைக் கைவிட்டுள்ளார்.

இந்தியாவின் ஹைதராபாத் நகரில், எதிர்வரும் 19ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை பக்கம் 18 ›››

# நானேதான் பிரதமர் கூட்டரசும் நீடிக்கும்

## ரணில் நேற்று அதிரடி அறிவிப்பு



கொழும்பு, பெப்ரவரி 17

"அரசமைப்பு விதிகளுக்கு அமைய நானே தொடர்ந்தும் பிரதமர். அதில் எந்த மாற்றமும் கிடையாது. கூட்டு அரசும் ஆட்சியில் நீடிக்கும்".

– இவ்வாறு நேற்றுக் கொழும்பில் திட்டவட்டமாக அறிவித்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. பக்கம் 18 ›››

# கூட்டரசு 'அவுட்'

## ரணிலுக்கு சு.க. பதிலடி



கொழும்பு, பெப்ரவரி 17

தற்போது ஆட்சியிலிருக்கும் கூட்டு அரசு நீடிக்கும் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்தார். எனினும், கூட்டு அரசு நீடிக்காது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அரசமைப்பின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதமர் பதவியிலிருந்து தன்னை நீக்க முடியாது எனக் குறிப்பிட்ட ரணில் விக்கிரமசிங்க, சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியால் பக்கம் 18 ›››

# மைத்திரி - மஹிந்த இடையே சமாதானப் புறாவாக சுசில்!



கொழும்பு, பெப்.17

ஐக்கிய தேசியக் கட்சியை ஓரங்கட்டிவிட்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசொன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தரப்புக்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தலைமையிலான தரப்புக்கும் இடையில் இணக்கப்பாடுகளை எட்டும் தூதுப்புறாவாகச் சுசில் பிரேமஜயந்த தொடர் பேச்சுகளையும் கருத்துப் பரிமாற்றங்களையும் முன்னெடுத்துள்ளார். பக்கம் 18 ›››

## நல்லாட்சி அரசைக் காப்பாற்ற மைத்திரியுடன் ரஞ்சன் பேச்சு



கொழும்பு, பெப்.17

நல்லாட்சி அரசைத் தொடர்ந்து முன்னெடுத்துச்செல்வது தொடர்பில் இறுதிக் கட்டமாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளு பக்கம் 18 ›››

## கட்சி தாவினால் பதவி நீக்கம்

### சித்தார்த்தன் எச்சரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பெப்.17

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற உறுப்பினர்கள் அதிலிருந்து விலகி வேறு கட்சியுடன் சேர்ந்து ஆட்சிமையக்க முனைந்தால் உடனடியாகப் பதவி நீக்கம் செய்யப்படுவார்கள்.

இவ்வாறு நேற்று அறிவித்துள்ளார் நாடாளு பக்கம் 18 ›››

# சு.க. ஆட்சிக்கு மஹிந்த நிபந்தனையற்ற ஆதரவு

## மைத்திரியிடம் உறுதியளிப்பு

கொழும்பு, பெப்.17

உள்ளூராட்சித் தேர்தலில் தேசிய அரசின் இரு பிரதான பங்காளிக் கட்சிகளும் படுதோல்வியடைந்ததையடுத்து ஐ.தே.கவும், சு.கவும் தனித்து ஆட்சியைப் பிடிக்க துடியாய்த் பக்கம் 18 ›››

## திருடர்களுடன் இணைந்தால் மீண்டும் பாடம் கற்கும் அரசு!

### மைத்திரிக்கு சந்திரிகா அடி



கொழும்பு, பெப்.17

அரசு திருடர்களுடன் இணைந்து ஆட்சியமைத்தால் மக்கள் மீண்டும் பாடம் புகட்டுவரென முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார். பக்கம் 18 ›››

## எதிரணியில் இருந்தவாறே சு.க. அரசுக்கு ஒத்துழைப்பு

### மஹிந்த நேற்று தெரிவிப்பு

கொழும்பு, பெப்.17

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அரசை ஆட்சியில் அமர்த்த எதிர்க் கட்சியில் இருந்தவாறே ஆதரவு பக்கம் 18 ›››

## ரணிலின் பதவியைப் பிடுங்கிவிட உயர்நீதிமன்றை நாடும் மைத்திரி!

### சட்டமா அதிபருடன் நேற்றுச் சந்திப்பு

கொழும்பு, பெப்.17

பிரதமரை ஜனாதிபதியால் பதவி நீக்க முடியுமா என்பது தொடர்பில் உயர்நீதிமன்றத்திடம் விளக்கம் கோருவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான கடிதத்தை எதிர்வரும் 19ஆம் திகதி ஜனாதிபதி உயர்நீதிமன்றத்துக்கு அனுப்பி வைப்பார் எனத் தெரியவருகிறது.

அரசமைப்பின் 19 ஆவது பக்கம் 18 ›››

## தமிழ்த் தேசியக் கொள்கையுள்ள கட்சிகளை தம்முடன் இணையக் கோருகிறது முன்னணி

யாழ்ப்பாணம், பெப்.17

தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்திச் செயற்படுவதற்காக, தமிழ்த் தேசியக் கொள்கைப் பற்றுடைய அனைத்து சக்திகளையும் கட்சி பேதங்கள், அமைப்புப் பேதங்களைக் பக்கம் 03 ›››

## இலங்கைக்கு ஐ.நா. வழங்கிய கால அவகாசத்தை நிறுத்துக!

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கையெழுத்துப் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

கொழும்பு, பெப்.17

போரின்போது இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுவதற்கு இலங்கைக்கு வழங்கப்பட்ட இரண்டு வருட கால அவகாசத்தை உடனடியாக நிறுத்தி இலங்கை விவகாரத்தை ஐக்கிய நாடுகள் சபையின் பக்கம் 18 ›››

## ஆர்னோல்ட்டுக்குப் போட்டியாக மணிவண்ணன் களமிறங்குவார்!

### கஜேந்திரகுமார் நேற்று அறிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். மாநகரசபையின் முதல்வராக ஆர்னோல்ட்டைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவுசெய்துள்ள பக்கம் 03 ›››

### இனி இது ரகசியம் அல்ல!

தமிழ்க் கூட்டமைப்பு, உள்ளூராட்சித் தேர்தல் களில் தாம் முன்னணிக்குவந்தசபைகளில்– தனித்து அறுதிப் பெரும்பான்மை பெறாத நிலையிலும் – தன்பாட்டில் தவிசாளர், பக்கம் 03 ›››

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் | The Distinctive Voice of The Tamil Speaking People

# இனம் – மதம் – மொழி – பிரதேச வேறுபாடுகள் கடந்து நாம் அனைவரும் பெண்களாக ஒன்றிணைவது அவசியம்!

## பெண்கள் பணியகத்தினருடனான சந்திப்பில் வடமாகாண மகளிர் விவகார அமைச்சர் வலியுறுத்தல்!





யாழ்ப்பாணம், பெப். 17

பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் இருந்து அவர்களை மீட்டெடுப்பதற்கு இனம், மதம், மொழி, பிரதேச வேறுபாடுகள் கடந்து நாம் அனைவரும் பெண்களாக ஒன்றிணைந்து செயற்படுவது அவசியமாகும் என இலங்கை பெண்கள் பணியகத்தினருடனான சந்திப்பில் வட மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் வலியுறுத்தியுள்ளார்.

வட மாகாண மகளிர் விவகார அமைச்சின் கீழான செயற்பாடுகளைஆக்கபூர்வமானவழிமுறைகளில் முன்னெடுத்து செல்வதற்கு ஏதுவாக மத்திய மகளிர் விவகார அமைச்சின் கீழ் செயற்பட்டுவரும் இலங்கை பெண்கள் பணியகத்தினருடனான சந்திப்பு அமைச்சர் அனந்தி சசிதரன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடை பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் வடக்கு அமைச்சர் அனந்தி சசிதரன் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள பெண்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளை இலங்கையின் ஏனைய மாவட்டங்களில் உள்ள பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கவோ அதனடிப் படையில் உதவிகள் மற்றும் திட்டங்களை வரையறுக்கவோ முடியாது.

இலங்கை அரசு முன்னெடுத்து வந்திருந்த கொடும் போர் நடைபெற்ற காலத்திலும் அதன் பின்னரும் வடக்கு கிழக்கு வாழ் தமிழ்ப்பெண்கள் பல்வேறு வகையான பிரச்சினைகளை எதிர் நோக்கி வருகின்றார்கள்.

போரினால் ஏற்பட்ட உளவியல் தாக்கம், சமூக பாது காப்பு, பெண்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் வன்முறை, துஷ்பிரயோகம் மற்றும் பொருளாதார ரீதியான பிரச்சினை என்ற வகையில் பல்வேறு பிரச்சினைகளை நாம் எதிர் நோக்கி வருகின்றோம்.

எங்களுடைய கட்டமைப்பினூடாக இவ்வாறான பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைக் காண்பற்கோ நிவாரணத்தைப் பெற்றுக்கொடுக்கவோ முடியாத நிலை காணப்படுகிறது. மத்திய அரசிடம் தான் அதற்கான வாய்ப்புகள் மற்றும் வளங்கள் நிறைந்து காணப்படுகின்றன. இருந்தும் மத்திய அரசு முழுமையான கரிசனையுடன் இந்த விடயத்தில் கவனம் செலுத்தவில்லை.

வன்முறைகள் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகும் பெண்கள் தமக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு நீதிகேட்பதில் கூட பல்வேறு இடர்பாடுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

போரால் பெரிதும் பாதிப்பிற்குள்ளாகியிருக்கும் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கென விசேட திட்டங்களை நடைமுறைப் படுத்த வேண்டியதன் அவசியத்தை தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றேன்.

வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ்ப் பெண்களில் விதவைகளாக்கப்பட்டுள்ளவர்கள், இயற்கை மரணத்தினாலோ அல்லது நோய் வாய்ப்பட்டு ஏற்பட்ட மரணங்களினாலோ அவ்வாறு ஆனவர்கள் கிடையாது.

இலங்கை அரச முன்னெடுத்த போரின் விளைவாகவே இப் பெண்தலைமைத்துவ குடும்பங்கள் உருவாகியுள்ளன. ஆகவே, இந்த விடயத்தில் விசேட கவனமெடுத்து தீர்வு காணவேண்டிய பொறுப்பும் கடமையும் அதற்குக் காரணமான மத்திய அரசுக்கே உள்ளது.

பெண் தலைமைத்துவக் குடும்பத்தை தலைமை தாங்கும் தாயின் வறுமை அவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிப்பதுடன் அவர்களின் பிள்ளைகளது எதிர் காலத்தையும் பெரிதும் பாதிக்கின்ற விடயமாக உள்ளது.

அவர்களின்வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதன் ஊடாகவே இந்தநிலையை வெற்றிகொள்ள முடியும். நிதி உதவி ஒருபுறமிருந்தாலும் நிர்வாக ரீதியான ஒத்துழைப்பும் மத்திய அரசு தரப்பில் இருந்து சரிவரக் கிடைப்பதில்லை. இந்தச் சந்திப்பின் ஊடாக அதனை நிவர்த்தி செய்ய முடியும் என்று நம்புகின்றேன்.

இவ்வாறு, பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளில் இருந்து அவர்களை மீட்டெடுப்பதற்கு இனம், மதம், மொழி, பிரதேச வேறுபாடுகள் கடந்து நாம் அனைவரும் பெண்களாக ஒன்றிணைந்து செயற்படுவது அவசியமாகும்.

அந்த அடிப்படையில்தான் இனம், மதம், மொழி, நாடு கடந்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்தான பங்குபற்றல்களை செய்து வருகின்றேன் என்றும் அமைச்சர் அனந்தி சசிதரன் மேலும் தெரிவித்திருந்தார்

வட மாகாண மகளிர் விவகார அமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் இலங்கைப் பெண்கள் பணியகத்தின் உதவிப் பணிப்பாளர் சீதா கருணாரட்னே தலைமையில் வட மாகாணத்தில் பணியாற்றிவரும் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பங்கேற்றிருந்தனர்.

(க)

# சுஜீவ சேனசிங்க தாவினாலும் பெரும்பான்மை பலம் உள்ளது!



ஐ.தே.க. நம்பிக்கை

மகிந்த ராஜபக்ஷவின் கூட்டு எதிரணியின் ஆதரவுடன், சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியமைக்கும் முயற்சிகளில் இறங்கியுள்ளது.

அதேவேளை, நாடாளு மன்றத்தில் ஐ.தே.க .அரசுக்குப் பெரும்பான்மை பலம் உள்ளது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருக்கமான உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனினும், ஐ.தே.கவைச் சேர்ந்த இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க நேற்றுக் காலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து அவரது தலைமைத்துவத்தின் கீழ் செயற்பட விருப்பம் தெரிவித்துள்ளார் என்று கூறப்படுகிறது.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக அவர் ஐ.தே.க. தலைமைக்கு அறிவிக்கவில்லை. அவர் கட்சி தாவலாம் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, ஐ.தே.கவின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கபண்டாரவும், கட்சி தாவவுள்ளதாக நேற்று முன்தினம் தகவல்கள் வெளியான போதும் அவர் அதனை நிராகரித்துள்ளார்.

இதற்கிடையே, ஐ.தே.க. வட்டாரங்கள் தமக்குப் பெரும்பான்மை பலம் உள்ளதாக தகவல் வெளியிட்டுள்ளன.

இந்தநிலையில், தற்போதைய அரசியல் சூழ்நிலைகள் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது நிலைப்பாட்டை விளக்கி, சிறப்பு அறிக்கை ஒன்றை வெளியிடவிருந்தார் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# முல்லைத்தீவில் நான்கு உள்ளூராட்சி சபைகளுக்கும் தவிசாளர், துணை தவிசாளர்களை நியமித்தது கூட்டமைப்பு

முல்லைத்தீவு, பெப். 17

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கரைதுறைப்பற்று, புதுக்குடியி ருப்பு, துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய 4 உள்ளூராட்சி மன்றங்களிலும் வெற்றியீட்டிய தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களில் இருந்து சபைகளுக்கான தவிசாளர் மற்றும் துணைத் தவிசாளர்களை நியமித்துள்ளது.

ஒட்டுசுட்டானில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கட்சித் தலைவர்களுக்கும் மற்றும் வெற்றியீட்டிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களுடனான கலந்துரையாடலின் பின்னரே இந்த முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழரசுக்கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவினால் இந்தப் பெயர் விவரங்கள் ஊடகங்களுக்கு அறிவிக்கப்படும்போது புளொட் அமைப்பின் தலைவர் த. சித்தார்த்தன், ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சி. சிவமோகன் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா வட மாகாண விவசாய அமைச்சர் க. சிவனேசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம், வட மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் புவனேஸ்வரன் ஆகியோர் உடனிருந்தனர்.

இதன் பிரகாரம் புதுக்குடியிருப்பு பிரதேசசபைத் தவிசாளராக முதல் இரண்டு வருடங்களுக்கு செல்லையா பிரேமகாந்தும், அடுத்த இரண்டு வருடங்களுக்கு அருளானந்தம் தவக்குமாரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

உபதவிசாளராக முதல் இரண்டு வருடங்களுக்கு கனகசுந்தரசுவாமி ஜெனமேஜெயந்த்தும், எஞ்சிய இரண்டு ஆண்டுகளுக்கும் சபாரெத்தினம் திருச்செல்வத்தின் பெயரும் முன்மொழியப் பட்டுள்ளது.

இந்த நிலையில், முல்லைத் தீவு மாவட்டத்தின் கரைதுரைப்பற்று பிரதேச சபையின் தவிசாளராக முதல் இரண்டு ஆண்டுகளும் கனகையா தவராசாவும், எஞ்சிய இரண்டு ஆண்டுகளுக்கும் கமலநாயகம் விஜிந்தனும் தேர்வு செய்யப்பட்டமையோடு உப தவிசாளராக முதல் இரண்டு ஆண்டுகளுக்கு திருச்செல்வம் இரவீந்திரனும் எஞ்சிய இரண்டு ஆண்டுகளுக்கு மரியநாயகம் தொம்மைபிள்ளை ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டன.

இதேபோன்று, துணுக்காய் பிரதேச சபைக்கு தவிசாளராக அம்பலவாணர் அமிர்தலிங்கமும், உப தவிசாளராக தங்கவேல் சிவகுமாரின் பெயரும் முன்மொழியப்பட்டதோடு மாந்தை கிழக்குப் பிரதேசசபைக்கு தவிசாளராக சிவலோகநாதன் செந்தூரனும் உப தவிசாளராக பொன்னையா ஆனந்தகுமாரின் பெயரும் முன்மொழியப் பட்டன.

(க)

# உண்மைகளை அம்பலமாக்குவதால் விக்கியை ஓரம் கட்டுவதற்குச் சதி!

## கூறுகின்றார் கஜேந்திரகுமார்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பெப்.17

வடக்கு மாகாண முதலமைச்சர சி.வீ.விக்னேஸ்வரன் மக்களுக்கு உண்மைகளை வெளிப்படுத்தி வருவதாலே அவருக்கு எதிராக அவரது உறுப்பினர்களாலேயே சதி வேலைகள் முன்னெடுக்கப்பட்டுத் தனித்து விடப்பட்டுள்ளார் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

முதல்வரின் கருத்துக்கள் எமது கருத்து நிலைப்பாடுகளுடன் ஒன்றித்துத் போகக் கூடிய சூழலில், அடுத்து நடைபெறவிருக்கும் மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறி அவர் போட்டியிடுவாரானால் தமிழ்த் தேசியத்தின் பாதையில் இருந்த விலகாது பயணித்து வரும்தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிலில் மட்டுமே இணைந்து போட்டியிட முடியும் எனவும் கஜேந்திரகுமார் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்தலைமைஅலுவலகத்தில் நேற்று மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வடக்கு முதலமைச்சருக்கும் எங்களுக்கும் இடையில் அண்மையில் சந்திப்பொன்று நடைபெற்றிருந்தது. அதன்போது நாங்கள் பல விடயங்கள் குறித்தும் கலந்துரையாடியிருந்தோம். அவரும் நாங்களும் இணைந்து பொதுவான வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்ற தன் அடிப்படையில் அவரைச் சந்தித்துப் பேசினோம்.

வடக்கு முதலமைச்சர் கடந்த பல வருடங்களாக மக்களுக்கு உண்மைகளையேவெளிப்படுத்தி வருகின்றார். இதனால் அவரது உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் உள்ளிட்ட பலர் அவருக்கு எதிராகப் பல்வேறு சதி வேலைகளை முன்னெடுத்து வருகின்றனர். ஏனெனில் அவர் மாகாண சபையிலும் சரி அதற்கு வெளியிடும் சரி தமிழினத்திற்கு எதிராக முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடுகளுக்கு எதிரான உண்மைகளை வெளிப்படுத்தி வருகின்றதே அவருக்கு எதிரான இந்தச் சதி வேலைகளுக்கு காரணமாக உள்ளது.

இத்தகைய சதிவேலைகளால் அவர் தனித்து விடப்பட்டிருக்கின்றார். இவ்வாறு தமிழினம் சார்ந்த அவருடைய நிலைப்பாடுகள் மற்றும் கருத்துக்கள் எமது கருத்துக்களுடன் ஒத்துப்போகின்றதை நாம் பார்க்கின்றோம். ஆகவே எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் அவர் எமது கட்சி சார்பாக களமிறங்குவாராயின், நாம் அதனை ஏற்றுக் கொள்வோம். அதற்காக நாம் அவரை எமது கட்சியில் போட்டியிடுமாறு வற்புறுத்தவில்லை-என்றார். (ஐ-7)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உபதவிசாளர் மற்றும் மேயர், பிரதிமேயர் எனப் பெயர்ப் பட்டியலை அறிவித்து வருகின்றது.

சம்பந்தப்பட்ட சபைகளின் முதல் கூட்டம் அப்பிரதேசத்திற்குரிய உள்ளூராட்சி உதவி ஆணையாளரினால் கூட்டப்படும் போதுதான் இந்தப் பதவிகளுக்கான தேர்வுகள் நடக்கவிருக்கின்றன.

பூநகரி பிரதேச சபையையும், ஊர்காவற்றுறை பிரதேச சபையையும், பொறுத்த வரை நிலைமை வேறு. அந்த இரண்டு சபைகளிலும் முறையே கூட்டமைப்பும், ஈ.பி.டி.பியும் தனித்து அறுதிப் பெரும்பான்மை பெற்றுவிட்டன. அதனால் அந்தந்தக் கட்சியின் செயலாளர்கள் எழுத்து மூலம் அறிவிக்கும் உறுப்பினர்களின் பெயர்களே தவிசாளராகவும், பிரதித் தவிசாளராகவும் அறிவிக்கப்படும்.

ஆனால்ஏனைய சபைகளில் முதல் கூட்டத்தில்தான் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களிடையே இருந்து தவிசாளர், பிரதித் தவிசாளர் அல்லது மேயர், பிரதி மேயர்தெரிவுசெய்யப்பட வேண்டும்.

போட்டியிருக்குமானால்உறுப்பினர்களிடையே தேர்தல் நடத்த வேண்டியும் வரும். அத்தேர்தல் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்பதே கேள்வி.

முதலாவது கூட்டத்திற்கு சமுகம் தந்துள்ள பிரதிநிதிகளில் பெரும்பான்மையானோர் இரகசிய வாக்கெடுப்புக் கோரினால் வாக்குச் சீட்டு மூலம் மேயர்/தவிசாளர் மற்றும் பிரதி மேயர்/பிரதி தவிசாளர் தெரிவு நடைபெற வேண்டும் என 2012 ஆம் ஆண்டின்22ஆம்இலக்கஉள்ளூராட்சி சபைச் சட்டத்தின் 66 (ழ) பிரிவின் 8 ஆவது உப பிரிவு கூறுகின்றது.

அதேசமயம், அத்தகைய தேர்தலில் இரண்டுக்கு மேற்பட்டோர் போட்டியிடும் நிலைமை வந்தால், அளிக்கும்வாக்குகளின் அரைவாசிக்குக் குறையாத வாக்குகளை ஒருவர் பெறும் வரை, அத்தேர்தல்களில் கடைசியாக வரும் ஒவ்வொருவரையும் நீக்கித் தேர்தல் திரும்பத் திரும்ப நடத்தப்பட வேண்டியிருக்கும் என்றும் அச்சட்டம் கூறுகின்றது.

பெரும்பாலான சபைகளில் கூட்டமைப்பு அதிக ஆசனங்களைப் பெற்றிருந்தாலும், கூட்டமைப்புக்கு மாற்றான கட்சிகள் மொத்தமாக, கூட்டமைப்பிலும் விடக் கூடுதலான ஆசனங்களைத் தமக்குள் பெற்றுள்ளன. இந்தப் பின்புலத்தில் அந்தச் சபைகளில் இரகசிய வாக்கெடுப்பு கோருவதற்கான வாய்ப்புகள் அதிகம் உண்டு என்றும், அப்படிக் கோரும் பட்சத்தில் தவிசாளர்கள், பிரதித் தவிசாளர்கள், மேயர், பிரதி மேயர் பதவிகளுக்கு கூட்டமைப்பு நியமித்த ஆள்கள் 'அம்பேல்' ஆகும் சாத்தியம் அதிகம் என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இன்னும் ஓரிரு வாரங்களில் நிலைமை தெளிவாகியிடும். அது வரை பொறுத்திருந்து பார்ப்போமே...!

-மின்னல்-

## இலங்கைக்கு...

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச நீதிமன்றில் இலங்கையை முன்னிறுத்த வேண்டும் அல்லாவிடின் குறைந்த பட்சம் இலங்கைக்கென சர்வதேச விசாரணைத் தீர்ப்பாயம் ஒன்றாவது உருவாக்கப்படவேண்டும் என வலியுறுத்தவுள்ளோம்.

இதன்பொருட்டு மக்களிடம் கையெழுத்துக்கள் பெறப்பட்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கவுள்ளோம். இதற்கான கையெழுத்துப் போராட்டத்தை விரையில் ஆரம்பிக்கவுள்ளோம்.

இந்தப்போராட்டமானது தமிழ் மக்கள் பேரவை அதனை இணைத்தலைவரான முதலமைச்சர் விக்னேஸ்வரன் மற்றும் பொது அமைப்புக்களின் பங்களிப்புடன் நடைபெறவுள்ளது. வீடு வீடாக மக்கள் மத்தியில் கொண்டு சென்று கையெழுத்துக்கள் பெறப்படும். அந்த மக்களுக்கு யதார்த்த நிலை பற்றி தெளிவுபடுத்தப்படும் – என்றார். (ஐ)

## தமிழ்த்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்து எம்முடன் இணைந்து செயற்பட அழைக்கிறோம்.

–இவ்வாறு பகிரங்கமாகக் கோரிக்கை விடுத்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி.

தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகளைக் கைவிட்டுத் தமது சுயநலத்துக்காக ஒற்றுமை என வேடமிட்டுள்ளோருடன் நாம் இணையப்போவதில்லைஎன்றும் அது கூறியுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில்வெளியிட்டுள்ளவிசேட அறிக்கையிலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

எமக்கு எதிரான பொய்ப் பிரசாரங்களையும், இருட்டடிப்புகளையும் தாண்டி எம் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த எம் அன்பிற்குரிய மக்களுக்கு எமது இதயம் கனிந்த நன்றிகள். உங்கள் நம்பிக்கைக்கு அமைய நாம் உங்களுக்காய் தொடர்ந்தும் பணியாற்றுவோம். நாம் பெற்றிருக்கும் வெற்றியென்பது தனித்து ஒரு கட்சியின் வெற்றியல்ல. மாறாக, தமிழர்களின் நலனை முதன்மைப்படுத்திய கொள்கைக்காக எமது மக்கள் வழங்கிய அங்கீகாரமும் வெற்றியுமாகும். இது ஒரு ஆரம்பம் மட்டுமே. நீண்ட கடினமான பணிகளும் சவால்களும் எமக்குக் காத்திருக்கிறது.

தொடர்ச்சியான அழுத்தங்கள், அச்சுறுத்தல்கள், பாரபட்சங்களுக்கும் எதிர்நீச்சல் போட்டவாறே எமது கட்சியின் தோற்றமும் செயற்பாடும் இருந்தது, இருந்து வருகிறது. இதன் காரணமாக தமிழர் தேசத்தின் பெரும்பாலான மக்களை நேரடியாக சந்தித்து, உண்மை நிலைமைகளை எடுத்து விளக்கி, தமிழர் தேசத்தின் நலனை எவ்வாறு முன்னெடுத்துச் சென்று நிலைநிறுத்துவது என்பது தொடர்பாக எடுத்துக் கூறமுடியாமல் போனமை எமது ஆழமான கரிசனைக்குரிய விடயம். ஆயினும், இந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்காக எங்கள் உறவுகளின் வாசல் தேடி எதிர்காலத்தில் வருவோம்.

இலட்சியத்தில் உறுதிபூண்டு கொள்கையால் ஒன்றுபட்ட மக்களாலேயே தேசநலனை முன்னிறுத்திச் செயற்பட முடியும். இதற்கு எமது மக்களின் ஆதரவு இன்றியமையாதது. பூகோள அரசியலால் நாம் சந்தித்த சவால்களையும், எமக்கிருக்கின்ற சந்தர்ப்பங்களையும் நாம் தெளிவாக எமது மக்களுக்கு எடுத்து விளக்கும்போது, இந்தத் தேர்தலில் எமக்கு வாக்களிக்காத எமது மக்கள்கூட, இனி வரும் காலத்தில் எமது கொள்கையை பலப்படுத்துவதற்கு அங்கீகாரமும் ஆதரவும் தருவார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. இதற்கு நாம் இன்று அடைந்துள்ள வெற்றி ஒரு சாட்சி.

ஏனையோர் சொல்வதைச் செய்வதற்கும், தருவதைப் பெறுவதற்கும் நாம் ஒன்றும் அடிமைப்பட்ட இனமல்ல. எமது பேரம் பேசும் பலத்தை சரணாகதி அரசியலூடகவோ, இணக்க அரசியலுடாகவோ அதிகரிக்க முடியாது. ஆகவே, எமது தேச நலனை முதன்மைப்படுத்திய உறுதியான கொள்கையை எடுத்துள்ள நாம், அதனை அமுல்படுத்துவதற்கான நிகழ்ச்சி நிரலை வகுத்து, செயற்திட்டங்களை முன்னெடுக்க இருக்கிறோம். இது தொடர்பான சிறப்புக் கலந்துரையாடல்களை எதிர்காலத்தில் உங்களோடு மேற்கொள்ள இருக்கிறோம்.

தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகளைக் கைவிட்டு தமது சுயநலத்திற்காக ஒற்றுமை என வேடமிட்டுள்ளோருடன் நாம் இணையப் போவதில்லை. பதவிகளுக்கான கூட்டையோ தேர்தல்களுக்கான கூட்டையோ நாம் விரும்பவில்லை. ஆனால், தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காகக் கூட்டை, எம் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கான கூட்டை எமது கொள்கையின் அடிப்படையில் உருவாக்குவதற்குத் தயாராகவே உள்ளோம்.

இதேவேளை, தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தி செயற்படுவதற்காக, தமிழ்த் தேசியக் கொள்கைப் பற்றுடைய அனைத்து சக்கதிகளையும் கட்சி பேதங்கள் அமைப்புப் பேதங்களைக் கடந்து எம்முடன் இணைந்து செயற்பட முன்வருமாறு நாம் கேட்டுக்கொள்கிறோம்.

தாயகத்தில் வாழும் மக்களுக்கும் புலம்பெயர்ந்து வாழும் உறவுகளுக்குமிடையில் உள்ள பிணைப்பைச் சிதைப்பதற்காய், பிளவுகளையும் பிரச்சினைகளையும் உருவாக்குவதற்குப் பல்வேறு சக்திகள் பல சதித் திட்டங்களைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் மேற்கொண்டு வந்தனர், வருகின்றனர். தமிழர் தேசத்தை அழிப்பதை நோக்காகக் கொண்ட செயற்திட்டத்தின் ஒரு அங்கமே இந்தச் சதியும். ஆயினும், அவர்களின் திட்டங்களை தவிடுபொடியாக்குவது போல், தமிழ்த் தேசியப் பேரவையின் வெற்றிக்காய் புலம் பெயர்ந்த மக்களும், அமைப்புக்களும் அர்ப்பணிப்போடு பணியாற்றினார்கள். இது புலம்பெயர்ந்து வாழும் எமது உறவுகள் எங்கு வாழ்ந்தாலும், தமிழர் தேசத்தின் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாடுகள் மீது கொண்டுள்ள பற்றுறுதியை எடுத்துக் காட்டுகிறது. புலம்பெயர் உறவுகளுக்கு எமது பாராட்டுதல்களையும் நன்றியையும் தெரிவிப்பதோடு, நாம் எமது தேசத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கான பயணப் பாதையில் நெருப்பாறுகளையும் நீந்திக் கடக்கவேண்டியுள்ளதால், உங்களது ஆதரவை மென்மேலும் வழங்கவேண்டுமென்று அன்புரிமையோடு கேட்டுக்கொள்கிறோம் – என்றுள்ளது. (ஐ)

## ஆர்னோல்ட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில், சட்டத்தரணி மணிவண்ணனைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் களமிறக்கும். எனினும்எமதுகட்சியைத்தவிர்த்து ஏனைய கட்சிகள் பெரும்பான்மையை நிரூபித்தால் நாங்கள் பக்கபலமாகப் பொறுப்புடன் செயற்படுவோம். யாரையும் குழப்ப மாட்டோம்.

இவ்வாறு நேற்று அறிவித்தார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுத் தாம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைப்பது தொடர்பாகக் கட்சிகள் பலவும் பேச்சுக்களை நடத்தி வருகின்றன. எம்முடனும் பலரும் பேசியிருக்கும் நிலையில் நாம் எந்தக் கட்சியுடனும் இணைந்து கொள்வது தொடர்பில் முடிவெடுக்கவில்லை.

இந் நிலையில் யாழ்.மாநகர சபையின் மேயராக முன்னாள் மாகாண சபை உறுப்பினரான ஆர்னோல்ட்டைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நியமித்துள்ளதாக அறிகின்றோம். அவ்வாறு அவர்கள் ஒருவரை நியமித்தள்ளமை போன்று நாங்களும் ஒருவரை நியமிக்க இருக்கின்றோம்.

கூட்டமைப்பினர் நியமித்துள்ள ஆர்னோல்ட்டுக்கும் எமக்கும் இடையே தனிப்பட்ட ரீதியில் எந்தவித முரண்பாடுகளும் இல்லை. ஆனால் தேர்தலின் போது எமது மக்களைப் பிளவுபடுத்தும் வகையில் மத ரீதியான பல விடயங்களை அவர் செய்திருக்கின்றார்.

மாகாண சபையில் இருந்த போதும் முதலமைச்சர் விக்கினேஸ்வரனுக்கு எதிராகப் பல சதி வேலைகளை மேற்கொண்டிருந்தார். ஏனெனில் அவரது எஜமானான கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் அறிவுறுத்தலுக்கமையவே இவ்வாறான செயற்பாடுகளை அவர் முன்னெடுத்திருந்தார்.

இத்தகைய பிரச்சினைகள் தனிப்பட்ட பிரச்சினைகள் அல்ல. இவை ஒட்டமொத்தப் பிரச்சனைகளாகவே பார்க்கப்படுகின்றன. இவ்வாறானதொரு சூழலில்தான் கூட்டமைப்பினர் அவரை நியமித்துள்ளதால் நாமும் ஒருவரை நியமிக்கத் தீர்மானித்துள்ளோம். ஆனாலும் சபையில் அவர் பெரும்பான்மையைக் காட்டினால் நிர்வாகத்தை நடத்தலாம். அதற்கு நாம் பக்கபலமாகச் செயற்படுவோம்.

நாம் இரு சபைகளில் பெரும்பான்மையைப் பெற்றிருக்கும் நிலையில், மேலும் பல சபைகளில் எமக்குப் பெரும்பான்மை கிடைக்க கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. ஏனெனில் எம்மோடு இணைந்த செயற்படப் பலர் முன்வந்திருக்கிறார்கள். இவ்வாறு எமக்கான ஆதரவு அதிகரித்து வருவதால் நாம் அத்தகைய சபைகளிலும் ஆட்சிமைப்பதற்கான முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றோம் – என்றார். (ஐ-7)

டயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி

அனைத்து வகையான வாகனங்கள், மோட்டார் சைக்கிள் மற்றும் உடைந்த பிளாஸ்ரிக் பொருள்கள் 1, 2, 3 வருட கால உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் ஒட்டித்தரப்படும்

108, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 021 222 8680
077 592 5088

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## 'நல்லாட்சி அரசு' போக இனி 'இழுபறி' அரசுதான்!

நல்லாட்சி அரசின் ஆயுள்காலம் நாள்களை எண்ணும் நிலைக்கு வந்துவிட்டது. எந்நேரமும் அது முடிவுக்கு வரலாம் என்ற இழுபறிக் கட்டம் உறுதியாகிவிட்டது.

நல்லாட்சி அரசுக்காக ஒன்றிணைந்த ஐக்கிய தேசிய முன்னணியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஒருவருக்கு ஒருவர் கால் வாரும் நடவடிக்கைகளைப் பகிரங்கமாகவே ஆரம்பித்துவிட்ட பின்னர், நல்லாட்சி என்பதே அர்த்தமற்றுப் போய்விட்டது.

நல்லாட்சி அரசை அமைப்பதற்காக யாரை நம்பி - யார் மீது நம்பிக்கை வைத்து - அவரை நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக ஐக்கிய தேசிய முன்னணி கொண்டு வந்ததோ, அவரே நல்லாட்சி அரசுக்குக் கால்வாரும் கைங்கரியத்தைக் கனகச்சிதமாக ஒப்பேற்றும்போது கூட்டைக் குழப்புவதைத் தவிர ஐ.தே. கட்சிக்கும் வேறு வழியில்லை.

நல்லாட்சிக்காக ஒன்றிணைந்தவர்களை விலைக்கு வாங்கும் 'குதிரையோட்டம்' சத்தம் சந்தடியின்றி கொழும்பில் அரங்கேறுகின்றது. இந்தக் குதிரையோட்டத்தில் யார் வெல்கின்றாரோ அவர்கள் அரசை அமைக்கலாம் என்ற நிலைமை.

எனினும், இது விடயத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கை சற்று ஓங்கியிருப்பதாகக் களத் தகவல்கள் கூறுகின்றன.

சு.க. பக்கத்திலிருந்து யாரை ஐ.தே.க. கொழுவி இழுத்துக் தன் பக்கம் சேர்த்து, அதன் மூலம் அரசுக்கான பெரும்பான்மையைப் பெற்றாலும், அப்படி சு.கவிலிருந்து ஐ.தே.க. பக்கம் தாவுவோரை, புதிய ஐ.தே. முன்னணி அரசில் அமைச்சர்களாக நியமிக்க இணங்கமாட்டேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறிவிட்டாராம். அது பகிரங்கமானமையால் சு.க. பக்கத்திலிருந்து ஐ.தே.க. பக்கத்துக்கான 'குதிரையோட்டம்' தடைப்பட்டிருப்பதாகவும் கேள்வி. இதனால் குதிரையோட்டம் ஒரு பக்கமாக - ஐ.தே.க. பக்கத்திலிருந்து சு.க.பக்கத்துக்கு அமைவதற்கான சாத்தியமே அதிகம் இருப்பதாகவும் கூறப்பட்டது.

எது, எப்படியோ நல்லாட்சி அரசு இனிமேலும் தொடரப் போவதில்லை என்பது தெளிவு. அதனால் -

★ புதிய அரசமைப்பு உருவாக்கம் அடியோடு 'அவுட்'!

★ தேர்தல் சீர்திருத்தங்களும் வரா. அடுத்த நாடாளுமன்றத் தேர்தலும் தற்போதைய விகிதாசாரப் பிரதிநிதித்துவப்படியே பெரும்பாலும் நடக்கும். தொகுதிவாரி மற்றும் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் கலந்த முறைமைக்கு இப்போதைக்கு சாத்தியமில்லை. இனி அமையக்கூடிய ஒரு கட்சி ஆட்சியால் தேர்தல் முறைமையைச் சீரமைக்கும் சட்டம் ஒன்றைக் கொண்டு வந்து நிறைவேற்றுவது துர்லபமே.

★ மாகாண சபைகளின் தேர்தல்களும், முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் பல ஆண்டுகளாக நடத்தப்படாமல் தொங்கியமைபோலவே இழுபடப் போகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. இப்போது நிறைவேற்றப்பட்டுள்ள மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்டத்தின் கீழ், மாகாணங்களின் தொகுதிகள் மீள் எல்லை நிர்ணயம் செய்யப்பட்டு, வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டு, சட்டமாக்கப்பட்ட பின்னரே தேர்தலை நடத்த முடியும். இந்த மார்ச் மாதத்துக்குள் அதைச் செய்து முடிப்பார்கள் என்று நாடாளுமன்றத்தில் உறுதி கூறியிருந்தார்கள். ஆனால், அது முன்னகர்வதற்கான ஆயத்தங்கள் நடப்பதற்கு முன்பே, நல்லாட்சி அரசு கலைந்துவிடும் சூழல். புதிதாக அமையக்கூடிய எந்த அரசும் 'இழுபறி' அரசாகவே இருக்கும் என்று ஆரூடம் கூறப்படும் நிலையில், அந்த அரசால் மாகாண சபைகளின் எல்லைகளை மீள் நிர்ணயம் செய்து, அதற்கான சட்டங்களைக் கொண்டுவரமுடியுமா, அப்பிடிக் கொண்டு வந்தாலும் அந்த எல்லை நிர்ணயங்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தொடரப்பட்டால் அப்பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்கு எவ்வளவு காலம் செல்லும் என்பவை எல்லாம் விடை கூறமுடியாத வினாக்கள். ஆக, மாகாண சபைத் தேர்தல்களும் கூடத் தள்ளிப் போகும் என்ற ஊகத்தை மட்டும் இப்போதைக்குக் கூறமுடியும்.

நல்லாட்சி அரசு சிதைந்து, ஐ.தே.க. தரப்போ அல்லது சு.க. தரப்போ தனித்த ஆட்சி அமைத்தாலும், அது தாக்குப் பிடித்து எஞ்சிய இரண்டரை ஆண்டு காலமும் ஓடுமா என்பதும் கேள்விக்குறியே. அப்படி ஓடாவிட்டாலும், இந்த நாடாளுமன் றத்தை முடிவுறுத்தி, புதிய பொதுத் தேர்தலுக்குப் போகவும் வாய்ப்புகள் - சாத்தியங்கள் - இல்லை என்றே சுட்டிக் காட்டப்படுகின்றது.

புதிய அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின்படி, ஒரு நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தில் நான்கரை ஆண்டுகள் முடிவதற்கு முன்னர் அதனை ஜனாதிபதியால் கலைக்க முடியாது. அதன்படி, தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பதவிக் காலம் அடுத்த ஆண்டு டிசம்பரில் முடியும் வரை அவரினால் தற்போதைய நாடாளுமன்றத்தைக் கலைக்கவே முடியாது. அப்படி இல்லையாயின், தற்போதைய நாடாளுமன்றம் தன்னை நேரத்துடன் கலைத்துப் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான தீர்மானம் ஒன்றை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற வேண்டும்.

அப்படி - அத்துணை பெரும்பான்மையுடன் - நாடாளுமன்றத்தை முற்கூட்டியே கலைப்பதற்கான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவது அசாத்தியமானது; செய்யக்கூடியதல்ல.

ஆக, இந்த நாடாளுமன்றம் இனிமேல் பதவிப் போட்டியில் - பிரதான கட்சிகளின் அதிகாரப் பலப்பரீட்சைக்கான - 'இழுபறி' மையமாக அமையப் போகின்றது என்பது மட்டும் நிச்சயம்.

# வடக்கு மனித உரிமை ஆணைக்குழுவில் 3 ஆண்டுகளில் 1944 முறைப்பாடுகள் பதிவு!

கொழும்பு, பெப். 17

வட மாகாணத்தில் கடந்த 3 ஆண்டுகளில் காணாமற் போனோர் தொடர்பாக 62 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் செயற்பாடுகள் தொடர்பில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அந்தவகையில், வட மாகாணத்தில் கடந்த 3 ஆண்டுகளில் 1944 முறைப்பாடுகள் உரிய முறையில் பதிவு செய்யப்பட்டு, மனித உரிமை ஆணைக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

நாளொன்றுக்கு 100 இற்கு மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற போதிலும், சில முறைப்பாடுகள் உடனடியாகவே தீர்க்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் கடந்த 2015 ஆம் ஆண்டு யாழ். பிராந்திய அலுவலகத்தில் 315 முறைப்பாடுகளும், கிளிநொச்சி உப அலுவலகத்தில்93முறைப்பாடுகளும், வவுனியா பிராந்திய அலுவலகத்தில் 284 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2016 ஆம் ஆண்டு யாழ். பிராந்திய அலுவலகத்தில் 219 முறைப்பாடுகளும், கிளிநொச்சி உப அலுவலகத் தில் 129 முறைப்பாடுகளும், வவுனியா பிராந்திய அலுவலகத்தில் 315 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2017ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வரை யாழ். பிராந்திய அலுவலகத்தில் 188 முறைப்பாடுகளும், கிளிநொச்சி உப அலுவலகத்தில் 73 முறைப்பாடுகளும், வவுனியா பிராந்திய அலுவலகத்தில் 256 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதில் முக்கியமாக 2015 ஆம் ஆண்டு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பில் 27 முறைப்பாடுகளும், பலவந்தமாகக் கைது செய்யப்பட்டமை தொடர்பில் 27 முறைப்பாடுகளும், காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் 22 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, 2016 ஆம் ஆண்டு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பில் 85 முறைப்பாடுகளும், பலவந்தமாக கைது செய்யப்பட்டமை தொடர்பில் 52 முறைப்பாடுகளும், காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் 20 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை, கடந்த 2017 ஆம் ஆண்டு செப்ரெம்பர் வரை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பில் 55 முறைப்பாடுகளும், பலவந்தமாக கைது செய்யப்பட்டமை தொடர்பில் 25 முறைப்பாடுகளும், காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் 20 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் தெரியவந்துள்ளது.

(க)

# கறுப்புப் பட்டியலில் இருந்து இலங்கையை மீட்க நடவடிக்கை!

கொழும்பு, பெப். 17

ஐரோப்பிய ஒன்றியத்தின் கறுப்புப் பட்டியலில் இருந்து இலங்கையை மீட்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என மத்திய வங்கியின் ஆளுநர் அறிவித்துள்ளார்.

பணச்சலவை மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதை தடுப்பதற்கு போதுமான சட்டங்களை நடைமுறைப்படுத்தாத குற்றச்சாட்டுக்களின் பேரில், ஐரோப்பிய ஒன்றியத்தின் கறுப்புப் பட்டியலில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டே இலங்கைக்கு இது தொடர்பான எச்சரிக்கைகள் விடப்பட்டிருந்த போதும், அரசின் அசிரத்தை காரணமாக ஐரோப்பிய ஒன்றியம் தற்போது இலங்கையைக் கறுப்புப் பட்டியலுக்குள் உள்ளடக்கியுள்ளது.

கெசினோக்கள், சொத்துக்கள் மற்றும் காணி வர்த்தகம், இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகம் என்பவற்றின் ஊடாக குறித்த செயற்பாடுகள் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிலையில், இந்தப் பட்டியலில் இருந்து இலங்கையை எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்திற்குள் மீட்டெடுப்பதற்கு இலங்கை மத்திய வங்கி செயற்பாட்டுத் திட்டம் ஒன்றை வகுத்துள்ளது.

அதன் பிரகாரம் எதிர்வரும் காலத்தில் கசினோ நிலையங்கள், ரியல் எஸ்டேட் வர்த்தகம் மற்றும் மாணிக்கக்கல் வர்த்தகம் என்பவற்றில் புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம் என்றும் தெரியவந்துள்ளது.

# மாகாண சபைத் தேர்தல் ஏற்பாடு அடுத்த 3 மாதங்களில் ஆரம்பம்



கொழும்பு, பெப்.17

மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் அடுத்த மூன்று மாதங்களில் ஆரம்பிக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப் பிரிய தெரிவித்துள்ளார்.

குருநாகலில் நேற்று முன் தினம் ஊடகவியலாளர்களிடம் பேசியபோதே அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

மாகாணசபைத் தேர்தல்களை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடத்த முடியும். அதற்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணைக் குழு எதிர்வரும் மே மாதமளவில் ஆரம்பிக்கும்.

நடந்து முடிந்த தேர்தலில், ஏதேனும் அரசியல் கட்சி அல்லது வேட்பாளர்கள் பணம், பொருள்கள் அல்லது வேறேதும் பெறுமதியான பொருள்களை வாக்காளர்களுக்கு வழங்கியமை உறுதிப்படுத்தப்பட்டால், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தேர்தல் ஆணைக் குழு நடவடிக்கைகளை எடுக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மலையக ரயில் போக்குவரத்திற்காக 12 ரயில் இயந்திரங்கள் கொள்முதல்!

மலையகரயில்போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக 12 ரயில் இயந்திரங்களைக் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிலையியல் கொள்முதல் குழுவின் சிபார்சின் பெயரில் ஓர் இயந்திரம் 4.056 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு அமெரிக்காவின் M/s General Electric Company வழங்குவது தொடர்பில் போக்கு வரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா வழங்கிய ஆவணங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## நாளை

18.02.2018
ஞாயிற்றுக்கிழமை

நட்சத்திரம்: பூரட்டாதி பி.ப. 12.35 வரை
திதி: திருதியை பி.இ. 4.46 வரை
சுபநேரம்: 9.32 – 11.02 வரை
இராகுகாலம்: 5.02 – 6.32 வரை

காலைக்கதிர் Kalaikkathir



# தேர்தலில் தோல்வியுற்றோரையும் உள்ளடக்கி அபிவிருத்திப் பணிகள்



## ஜனாதிபதி மைத்திரிபால தெரிவிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் இம் முறை உள்ளூராட்சி மன்றத் தேர் தலில் போட்டியிட்டு வெற்றியீட் டிய, வெற்றியீட்டாத அனைத்து வேட்பாளர்களையும் ஒன்றிணைத்து, கட்சி மற்றும் அரசின் சார்பில் மக்களுக்குச் சேவையாற்றுவதற்கான செயற்திட்டம் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும்.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஜனாதிபதி தலைமை வகிக்கும் அரசியல் கட்சி, முன்னணியின் சார்பில் உள்ளூராட்சிமன்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற வேட்பாளர்கள் மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மாவட்ட, தொகுதி அமைப்பாளர்களுடன் நேற்றுமுன்தினம் பிற்பகல் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் முன்னணியில் அங்கம் வகிக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் மற்றும் ஈ.பி.டி.பி ஆகிய கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தி உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய வேட்பாளர்கள் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

அவர் அங்கு மேலும் தெரி வித்தவை வருமாறு:-

வெற்றியீட்டிய, வெற்றியீட்டாத எந்தவொரு வேட்பாளர்களையும் தவிர்க்காது சகலரையும் ஒன்றிணைத்து கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கான எனது பிரதிநிதிகளாக நியமிக்கின்றேன்.

ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகளற்ற அரசியலுக்கான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வாக்குறுதியை பாதுகாத்து முன்னோக்கிச் செல்லச் சகல பிரதிநிதிகளும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் பெற்றுக்கொண்ட அனுபவங்களைக் கொண்டு குறைபாடுகளை இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்தவாறு சரியான பாதையில் பலமான அரசியல் மற்றும் அபிவிருத்திச் செயற்திட்டங்களை முன்னெடுக்க சகலரும் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும். ஊழல், மோசடிகளற்ற அரசியல் இயக்கத்துக்கான சிறிலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கடந்த தேர்தலில் பெற்றுக்கொண்ட மக்கள் ஆணை தொடர்பாக நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

அத்துடன் கடந்த உள்ளூராட்சித் தேர்தல் பரப்புரை மேடைகளில் எனது முதன்மை விடயமாக அமைந்திருந்த ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகளை இல்லாதொழிக்கும் தேசிய செயற்திட்டம் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் ஆரம்பிக்கப்படும்

நாட்டின் சமயத் தலைவர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள் உள்ளிட்ட சகலரதும் பங்களிப்பும் இதற்காக பெற்றுக் கொள்ளப்படும். சர்வதேசத்தின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்ள எதிர்பார்த்துள்ளேன் - என்றார். (ஐ)

# பிரதமரை நீக்கும் அதிகாரம் ஜனாதிபதி மைத்திரிக்கு இல்லை!

கொழும்பு, பெப். 17

19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் மூலம் பிரதமரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருந்தாலும் பிரதமரை நீக்கும் அதிகாரம்ஜனாதிபதியிடம் இல்லை என உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.



அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவிப்பு

நேற்றுமுன்தினம் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

1978 ஆம் ஆண்டு ஜே. ஆர்.ஜெயவர்தனவின் அரசமைப்பில் கடிதம் ஒன்றை அனுப்பி பிரதமரை பதவி விலக்குவதற்கான அதிகாரம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு இருந்தது.

எனினும், 19 ஆவது திருத்த சட்டத்தின் படி அந்த அதிகாரம் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி இந்த அதிகாரம் பிரதமரிடமே காணப்படுகிறது. அவர்தான் தனது பதவி விலகல் கடிதத்தை வழங்க வேண்டும். இது தான் பிரதமர் ஒருவரை மாற்றுவதற்கு 19 ஆவது திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட் டுள்ள முறையாகும் என்றும் அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

# குற்றத்துக்குப் பொறுப்புக்கூறும் வயதெல்லை 12 ஆக உயர்கிறது

கொழும்பு, பெப்.17

இலங்கையில் குற்றவியல் சட்டத்தின் கீழ் பொறுப்புக் கூறுவதற்கான வயதெல்லை 8 இலிருந்து 12 வயதாக அதிகரிப்பதற்கான திருத்த வரைவுக்கு அமைச்சரவை அனுமதி வழங் கியுள்ளது.

நீதி அமைச்சர் தலதா அத்துகோரளவால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கே அமைச்சரவை அனுமதி வழங்கியது.

இலங்கைக் குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில் இதுவரை காலமும் 8 வயதுக்குக் குறைந்த சிறுவர்கள் மீது அவர்கள் புரியும் குற்றத்துக்கான பொறுப்புக்கள் சுமத்தப்படாது.

எனினும் இது மிகக் குறைந்த வயதாக உளவியல் மருத்துவ நிபுணர்கள் மற்றும் அதனுடன் தொடர்பான நிபுணர்களின் எண்ணமாக இருப்பதால், அதற்கான ஆகக் குறைந்த வயதெல்லையாக 12 வயதுவரை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 12 வயதுக்கு அதிகமான மற்றும் 14 வயதுக் கும் குறைந்த சிறுவர்களுக்குக் குறித்த குற்றம் தொடர்பிலான புத்திக்கூர்மை காணப்பட்டதா? என்பதைக்கணிப்பிடும் அதிகாரத்தை நீதிவான்களுக்கு வழங்கும் வகையில் இந்தச் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க குற்றவியல் நடைமுறைச் சட்டத்தைத் திருத்தம் செய்வது தொடர்பில் தயாரிக்கப்பட்டுள்ள சட்டவரைவே அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வுள்ளது. (ஐ)




# தவக்காலத்தில் கடவுள் நம்மிடம் எதிர்பார்ப்பது என்ன

தவக்காலம் தொடங்கியதும், கடவுளுக்காக என்று கூறி, நாம் நோன்பு இருக்க ஆரம்பித்து விடுகிறோம். நம்முடைய தவக்கால நோன்பு, இறைமகன் ஏசுவுக்கு ஏற்புடையதாக இருக்கிறதா? தவக்காலத்தில் கடவுள் நம்மிடம் எதிர்பார்ப்பது என்ன என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

உண்மையான வழிபாடு எது? தூய நோன்பு எத்தகையது? கடவுள் விரும்பும் செயல்கள் எவை? கடவுளை வழிபடுபவர்களுக்கு விடுதலையையும், மகிழ்ச்சியான வாழ்வையும் தருபவை எவை? என்ற கேள்விகளுக்கு விடை தருகிறார் தீர்க்கதரிசி ஏசாயா. ஒருவன் நாணலைப்போல் தன் தலையை தாழ்த்தி சாக்கு உடையையும், சாம்பலையும் அணிந்து கொள்வதா எனக்கு ஏற்ற நோன்பு? இதையா நோன்பு என்றும், ஆண்டவருக்கு உகந்த நாள் என்றும் நீங்கள் அழைக்கிறீர்கள்? கொடுமை. தடைகளை அவிழ்ப்பதும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்புவதும், எவ்வகை நுகத்தடியை உடைப்பதும் அன்றோ நான் தேர்ந்து கொள்ளும் நோன்பு (ஏசாயா 58:5 6).

இறை வழிபாடு என்பது கோவிலுக்குச் செல்வதிலும், உண்ணா நோன்பு இருப்பதிலும், கடன் திருநாட்களை கடைப்பிடிப்பதிலும் அடங்கியிருப்பதில்லை. மாறாக, நல்லதைசெய்வதிலும், ஏழைகள், எளியவர்கள் மீது இரக்கம் காட்டுவதிலும், ஒடுக்கப்பட்ட சமுதாயத்தின் விளிம்புகளில் வாழ்பவர்களுக்கு உதவி புரிவதிலும்தான் அடங்கியுள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

பசித்தோர்க்கு உங்கள் உணவை பகிர்ந்து கொடுப்பதும், தங்க இடமில்லா வறியோரை உங்கள் இல்லத்திற்கு அழைத்து வருவதும், உடையற்றோரைக் காணும்போது அவர்களுக்கு உடுக்கக் கொடுப்பதும், உங்கள் இனத்தாருக்கு உங்களை மறைத்து கொள்ளாதிருப்பதும் அன்றோ நான் விரும்பும் நோன்பு (ஏசாயா 58:7) என்கிறார் கடவுள்.

நம்மிடம் இறைவன் எதிர்பார்ப்பது இதுதான். ஆனால் நாம் இவைகளை பின்பற்றாமல், நம்மை வருத்திக்கொண்டு நோன்பு இருக்கிறோம். இறைவனின் விருப்பப்படி சமத்துவ சமதர்ம சமுதாயத்தை உருவாக்குவதற்காக நோன்பு இருப்போம். அடுத்தவர் மீது அக்கறை இல்லாமல் ஆண்டவரை வழிபடுவது வெற்று வழிபாடு என்பதையும், பகிராத உண்ணா நோன்பு பொருளற்றது என்பதையும் உணர்ந்துகொள்வோம்.

ஏழை, எளியவர்கள் ஏற்றம் பெறுவதற்கும், ஒடுக்கப்பட்டு, நசுக்கப்பட்ட நிலைகளில் வாழும் மனிதர்களுக்கு விடுதலையை பெற்று தருவதற்காகவும் நம்மை நாம் முழுவதுமாய் அர்ப்பணிப்போம். இதுதான் அர்த்தமுள்ள நோன்பு என்பதைப் புரிந்து கொண்டு, இந்தத் தவக்காலத்தில் இறைவனோடு இணைந்து வாழ்வோம். உங்களுக்கு சமாதானம் உண்டாகட்டும்.

# மட்டக்களப்பில் தனித்து ஆட்சியமைக்க முடியாத நிலையில் 11 மன்றங்கள்

மட்டக்களப்பு,பெப்.17

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 11 உள்ளூராட்சி மன்றங்களில் எந்தக் கட்சியும் தனித்து ஆட்சியமைக்க முடி யாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

காத்தான்குடி நகர சபையில் மாத்திரம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து 10 உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளமையால் அக் கட்சி காத்தான்குடி நகர சபையில் தனித்து ஆட்சியமைக்கும் நிலையைப் பெற்றுள் ளது. எனினும் மட்டக்களப்பு ம ாவட்டத்திலுள்ள 12 மன்றங்களில் காத்தான்குடி தவிர்ந்த மட்டக்களப்பு ம ாநகரம், ஏறாவூர் நகர சபை உள்ளிட்ட 9 பிரதேச சபைகளி லும் எந்தவொரு கட்சியும் தனித்து ஆட்சியமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள் ளது.

மட்டக்களப்பு மாநகர சபையில் தமிழரசுக் கட்சி 17 ஆசனங்களை பெற் றுள்ள போதி லும் ஏனைய கட்சிகளில் இருந்து ஓரிரு உறுப்பினர்களின் ஆதரவு தமிழரசுக் கட்சி ஆட்சியமைப்பதற்கு தேவைப்படுகின்றது. அதே போன்று ஏறாவூர் நகர சபையில் முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பும், ஐக்கிய தேசியக் கட்சியும் சேர்ந்து ஆட்சியமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஓட்டமாவடி பிரதேச சபையின் ஆட் சியை தீர்மானிப்பதற்கு தமிழ் உறுப்பினா களின் ஆதரவு தேவைப்படுகின்றது. மண்முனைப் பற்று பிரதேச சபையில் ஆட்சியமைப்பதற்கு முஸ்லிம் உறுப்பினா களின் ஆதரவு தேவைப்படுகின்றது.

இவ்வாறு மட்டக்களப்பில் முஸ்லிம் பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய 9 உள் ளூராட்சி மன்றங்களில் போட்டியிட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு கூடுதலான ஆசனங்களை பெற்றிருந்தாலும் தனித்து ஆட்சியமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச இளைஞர் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளும் மட்டு. இளைஞன்

மட்டக்களப்பு,பெப்.17

நேபாளத்தில் நடைபெறும் சர்வ தேச இளைஞர் உச்சி மாநாட்டுக்கு மட்டக்களப்பு மாவட்டத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தி மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் சம்மேளனத்தின் முன் னாள் தலைவர் நேற்று நேபாளத்திற்கு சென்றுள்ளார்.

சர்வதேச இளைஞர் உச்சி மாநாடு நேபாளத்தில் இடம்பெறவுள்ளது. நேபாளத்தில் ஒரு வாரம் நடைபெறும் சர்வதேச இளைஞர் உச்சி மாநாட்டுக்கு இவருடன் சேர்த்து பத்துப்பேர் இலங்கை யில் இருந்து பயணம் செய்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் சம்மேளன முன்னாள் தலைவரும், வாழைச்சேனை கோறளைப்பற்று இளைஞர் சம்மேளனங்களின் முன் னாள் தலைவரும், வாழைச்சேனை பேத்தாளையைச் சேர்ந்தவருமான தங்கராசா சசிகுமார் என்பவரே நேபா ளத்திற்குச் சென்றுள்ளார்.



## டிப்பர் வாகனத்துடன் வான் மோதி விபத்து

கிண்ணியா,பெப்.17

நேற்று முன்தினம் இரவு கிண் ணியா கச்சக்கொடித்தீவுப் பிரதேச சபைக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட் டிருந்த டிப்பர் வாகனத்துடன் வான் ஒன்று மோதியதில் வானில் சென்ற சிறுமி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த சிறுமி தம் பலகாமம் 99 ஆம் கட்டையில் வசித்து வரும் ஒன்றரை வயதான யூசுப் யனீயா எனத் தெரியவந்துள்ளது.

99 ஆம் கட்டைப்பகுதியில் வசித்து வரும் காத்தான்குடியைச் சேர்ந்த ஹாரூன் தனது உறவினர்களை பார்ப் பதற்காகச் சென்று கொண்டிருந்த வேளை அவரது வான் ரயரில் காற்று போனமையால் கட்டுப்பாட்டை இழந்து வான் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிப் பருடன் மோதியதனாலேயே இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் உயிரிழந்த சிறுமியின் தாய் படுகாயமடைந்த நிலையில் கிண் ணியா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். உயிரி ழந்த சிறுமியின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளது.

டிப்பர் வாகனத்தின் சாரதியை கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணை களை கிண்ணியா பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.


சிறுமி சாவு; தாய் படுகாயம்

## தேசிய பாரிசவாத விழிப்புணர்வு தொடர்பான கலந்துரையாடல்



மட்டக்களப்பு,பெப்.17

தேசிய பாரிசவாத விழிப்புணர்வு நடை பவனி இம்முறை மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ளது

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொள்ளவுள்ளார்

மட்டக்களப்பு போதனா வைத் தியசாலை மற்றும் மாவட்ட செயலக மும் இணைந்து நடத்தும் தேசிய பாரிசவாத விழிப்புணர்வு நடைபவனி தொடர்பான மீளாய்வு கலந்துரையா டல் நேற்று முன்தினம் மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலகத் தில் மாவட்ட மேலதிக அரசாங்க அதி பர் திருமதி சுதர்னி ஸ்ரீகாந்த் தலை மையில் நடைபெற்றது .

நடைபெற்ற மீளாய்வுக் கலந்துரை யாடல் நிகழ்வில் மாவட்ட பிரதேச செயலாளர்கள், கல்வித்திணைக்கள அதிகாரிகள், வைத்திய அதிகாரி கள், பொலிஸ் திணைக்கள அதிகாரி கள், மாநகர ஆணையாளர், பிரதி ஆணையாளர், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், அரச சாரா நிறு வன பிரதிநிதிகள் கலந்துகொண்ட னர்.

## இரத்ததான நிகழ்வு

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இரத்த வங்கியின் இரத்தத் தட்டுப் பாட்டை குறைக்கும் வகையில் மாவட்ட செயலகத்தின் ஏற்பாட் டில் இன்று காலை 9 மணிக்கு இரத்ததான நிகழ்வு இடம்பெற வுள்ளது.

மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமாரின் வழிகாட் டலில் மட்டக்களப்பு இரத்த வங்கியுடன் இணைந்து ஏற் பாடு செய்யப்பட்டுள்ள இந்த இரத்ததான முகாமில் கொழும்பு நாரஹேன்பிட்டியிலுள்ள பிர தான இரத்த வங்கியின் பணிப் பாளர் டாக்டர் ருக்சான் பெல்லன கலந்து கொள்ளவுள்ளார்.

இதில், மாவட்ட செயலக அதி காரிகள், உத்தியோகத்தர்கள், பிரதேச செயலகங்களின் உத்தி யோகத்தர்கள், முப்படையினர், பிரதேச விளையாட்டுக் கழகங் களின் உறுப்பினர்கள் எனப் பெருந்தொகையானோர் இரத் ததானம் வழங்கவுள்ளனர்.

## சட்டவிரோதமாக மரக்குற்றிகளை கடத்தியவர் கைது

மட்டக்களப்பு,பெப்.17

ஓட்டமாவடிப் பகுதியில் வைத்து சட்டவிரோ தமான முறையில் பெறுமதியான மரக்குற்றி களைக் கொண்டு வந்த சந்தேக நபர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் மரங்கள் கடத்தப்படுகின்றன என பொலிஸா ருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப் படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப் பின்போது சந்தேக நபர் கைது செய்யப்பட் டுள்ளார். அத்துடன், கடத்திச்செல்லப்பட்ட மரக்குற்றிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

குருநாகல் பகுதியில் இருந்து ஏற்றி வந்த வெட்டப்பட்ட தென்னை மரங்களுடன் மறைத்து வைக்கப்பட்டு மரக்குற்றிகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

இதன்போது கைப்பற்றப்பட்ட மரக்குற்றி களின் பெறுமதி இரண்டரை லட்சம் ரூபா வாக இருக்கலாம் என வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனஞ் ஜய பெரமுன தெரிவித்துள்ளார்.



# சட்டம் ஒழுங்கு அமைச்சராக பொன்சேகாவை நியமிக்க வேண்டும்

## ‘மக்கள் சக்தி’ கோரிக்கை



பீல்ட் மார்ஷல் சரத் பொன் சேகாவை சட்டம் ஒழுங்கு அமைச்சராக நியமித்து, நீண்ட காலமாக இழுபடும் முன்னைய ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகளுக்கு எதிரான விசாரணைகளை துரிதமாக முன்னெடுக்குமாறு சிவில் சமூக அமைப்பான புரவெசி பலய கோரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை அதிகாரத்துக்குக் கொண்டு வருவதில் முக்கிய பங்காற்றிய புரவெசி பலய (‘மக்கள் சக்தி’) அமைப்பு, தற்போதைய அரசியல் குழப்பங்களைத் தீர்த்து, மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முன்வரவேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளது.

இதுதொடர்பாக, புரவெசி பலயவைச் சேர்ந்த தம்பர அமில தேரர் நேற்றுமுன்தினம் கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தவை வருமாறு:-

அமைச்சரவையில் மாற்றத்தை ஏற்படுத்தி சட்டம் ஒழுங்கு அமைச்சராக சரத் பொன்சேகாவை நியமிக்க வேண்டும்.

முன்னைய ஆட்சிக்கால குற்றங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுப்பதற்கு சரத் பொன்சேகாவை விட பொருத்தமானவர் வேறு யாருமல்லர்.

இலங்கை இராணுவம் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

கடந்த மூன்று ஆண்டுகளில் ராஜபக்ஷக்களுக்கு எதிரான நீதித்துறை சார்ந்த நடவடிக்கைகளை எடுப்பதற்கு சிறிசேன- ரணில் அரசு தவறியுள்ளது. அதன் விளைவுதான், பெப்ரவரி 10 தேர்தல் முடிவுகள்.

இந்த நடவடிக்கையை எடுப்பதற்கு சரத் பொன்சேகாவுக்கு 6 மாத கால அவகாசத்தை அரசு அளிக்க வேண்டும்.

ராஜபக்ஷக்களின் வழிகாட்டலின் கீழ், இரகசிய நடவடிக்கைகளைமேற்கொண்ட, ஆயுதப்படை அதிகாரிகளுக்கும் படையினருக்கும் எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

சீருடையில் தவறுகளைச் செய்த கொலைகாரர்களும், வல்லுறவாளர்களும், சீருடைக்குப் பின்னால் மறைந்து தப்பிக் கொள்ள அனுமதிக்கப்படக் கூடாது.

இரசாயனப் பசளைகளை உரிய நேரத்தில் விநியோகிக்கத் தவறிய விவசாய அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவை உடனடியாக அமைச்சர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் செய்தியாளர் சந்திப்பில் சிவில் சமூகத்தைச் சேர்ந்த கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து, நிமால்கா பெர்னான்டோ, சமீர பெரேரா, சமன் ரத்னபிரிய ஆகியோரும் கலந்துகொண்டனர். (க)

## ஜனாதிபதிக்கும் பிரதானிகளுக்கும் இடையிலான சந்திப்பு ரத்து!



கொழும்பு, பெப். 17

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுக்கிடையில் நேற்று கொழும்பு ஜனாதிபதி மாளிகையில் இடம்பெறவிருந்த சந்திப்பு அவசரமாக ரத்துச் செய்யப்பட்டது.

ஜனாதிபதி மற்றும் ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுக்கிடையிலான சந்திப்பு நேற்றுக் காலை இடம்பெறும் என ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீ ல.சு.க. ஆட்சி அமைக்கும் தீர்மானத்தில் மாற்றம் இல்லை

கொழும்பு, பெப். 17

ஐக்கிய தேசியக் கட்சி என்னதான் சொன்னாலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசு ஒன்றை அமைப்பதற்கு தமது கட்சி எடுத்துள்ள தீர்மானத்தில் எந்தவொரு மாற்றமும் இல்லை என விளையாட்டுத் துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர அறிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவின் பிரதமர் பதவியின் கீழ் நல்லாட்சி அரசு எதிர்வரும் 2020 வரை முன்னெடுத்துச் செல்லப்படும் என அமைச்சர் ராஜித சேனாரத்ன நேற்றுமுன்தினம் தெரிவித்த கருத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உடன்படுகின்றதா? என வினவியதற்கே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-



தயாசிறி ஜயசேகர கூறுகிறார்

நாம் ஐ.தே.க.யிடம் பல்வேறு அறிவிப்புக்களைச் செய்தோம். அதில் எந்தவொன்றுக்கு அவர்கள் உடன்படவில்லை. விசேடமாக பிரதமரை மாற்றுமாறு கூறினோம். இதனையாவது அவர்கள் செய்வதற்குத் தயாரில்லை.

இந்த மாற்றங்களைச் செய்வதற்குப் பதிலாக ஐ.தே.க.யின் பின் ஆசன உறுப்பினர்கள் தனியாட்சி அமைக்கப்போகிறோம் என ‘பைலா’ அடித்துக்கொண்டு திரிவதற்கு ஆரம்பித்தனர்.

எமக்குச் சவால் விடுக்க ஆரம்பித்தனர். நாம் சவாலுக்குத் தயார். ஸ்ரீ ல.சு.க. தலைமையிலான அரசு அமைக்க தற்போதே நாம் தயாராக உள்ளோம். இதற்குத் தேவையான நாடாளுமன்ற உறுப்பினர்களின் பலத்தைக் காட்டுவதற்கும் எமக்குத் தெரியும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# நிதி ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை ஜனாதிபதி மைத்திரியிடம் கையளிப்பு



கொழும்பு, பெப். 17

நிதி ஆணைக்குழுவின் 2016 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேற்றுமுன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்துக் கையளிக்கப்பட்டது.

நிதி ஆணைக்குழுவின் தலைவர் உதித்த எச்.பளிஹக்கார அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளித்தார்.

மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி, நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க ஆகியோர் இங்கு பிரசன்னமாயிருந்தனர்.

(க)

# சுற்றாடலுக்கு ஏற்ற வகையில் அமைக்கப்படும் தொழிற்சாலைகள்



அமைச்சர் ரிஷாத் கூறுகிறார்

கொழும்பு, பெப். 17

நாட்டில் சுற்றாடலுக்கு ஏற்றவகையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழிற்சாலைகள் அமைக்கப்படவுள்ளன என கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

புதிதாக கைத்தொழில்களை ஆரம்பிக்க விரும்பும் தொழில் முயற்சியாளர்களுக்குத் தேவையான தொழில்நுட்ப அறிவும், வசதிகளும் வழங்கப்படவுள்ளன என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

சர்வதேசத்தின் போக்கிற்கு அமைவாக பசுமையான கைத்தொழில் உற்பத்திகள் முன்னெடுக்கப்படும் என்றும் அமைச்சர் பதியுதீன் மேலும் தெரிவித்தார்.

# சிறுவர்களை அழைத்துச் சென்று நிதி திரட்டுவோர் கைதாவர்!



நிதி திரட்டுவதை இலக்காகக் கொண்டு சிறுவர்களை வர்த்தகத்தில் ஈடுபடுத்தும் குழுக்கள் பற்றி கண்டறிவதற்காக விசேட குழுக்கள் நாடு முழுவதும் நியமிக்கப்பட்டுள்ளன என சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

சிறுவர்களை அவர்களின் பெற்றோரும், பாதுகாவலர்களும் தொழிலில் ஈடுபடுத்த முடியாது எனவும் சில இடங்களில் பிள்ளைகளுக்கு சுகவீனம் ஏற்பட்டுள்ளதாக அவர்களை அழைத்துச் சென்று நிதி திரட்டும் மோசடிகளும் இடம் பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடுமுழுவதும் செயற்படும் குழுக்கள் இது பற்றி விசாரணைகளை முன்னெடுக்க விருப்பதாகவும் இவ்வாறான சம்பவங்கள் பற்றி அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு அல்லது 1929 என்ற இலக்கத்திற்கு முறைப் பாடு செய்யலாம் எனவும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

# மூத்த பத்திரிகையாளர் பெருமாளின் கவிதைத் தொகுப்பு நூல் வெளியீடு

## நாளை யாழ். நூலக கேட்போர் கூடத்தில்



மூத்த பத்திரிகையாளர் எஸ். பெருமாள் அவர்களின் ''யாருக்குச் சொந்தம் இந்தக் குழந்தை யாருக்குச் சொந்தம்?'' எனும் கவிதைத் தொகுப்புநூல் வெளியீட்டு நிகழ்வு -

நாளைஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு, யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் தலைமையில் இடம்பெறும்.

நூல் அறிமுக உரையை எழுத்தாளர் யோசெப்பாலா நிகழ்த்துவார்.

வைத்திய கலாநிதி எஸ். ஆர். புருஷோத்தமன் முதற்பிரதியைப் பெற்றுக் கொள்வார். ஓய்வுநிலை அதிபர் க. கணேசலிங்கம் சிறப்புரையையும், ஆசிரியர் ம. பா.மகாலிங்கசிவம் ஆய்வுரையையும் நிகழ்த்துவர். நூலாசிரியர் நன்றி மற்றும் ஏற்புரை வழங்குவார்.

சிறப்புப் பிரதிநிதிகளை வைத்தியர் சி.சிவ ரூபன், ஓய்வுநிலை ஆசிரியர்களான திருமதி மேரி பெனிக்னா பிலிப், ச.சிறிகுமார், திருமதி ஜசிந்தா ஸ்ரீஸ்காந்தராஜா, வைத்தியர் இரா.கிஷோர் ஆகியோர் பெற்றுக்கொள்வர்.

# தினசரி ராசி பலன்

(17.02.2018)

*2018ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் மாசித்திங்கள் 5 ஆம் நாள் சனிக்கிழமை துதியைத்திதி பி.இ. 4.51 மணிவரை. பின்னர் திரிதியை. நட்சத்திரம்: சதயம் பகல் 11.27 மணிவரை. பின்னர் பூரட்டாதி. அமிர்தயோகம் பகல் 11.27 மணிவரை. பின்னர் அசுப யோகம்.*

**ராகுகாலம்** - காலை 9.27 மணிமுதல் 10.56 மணிவரை
**சுபநேரம்** - மாலை 3.29 மணிமுதல் 4.59 மணிவரை
**திவசம் செய்ய வேண்டிய திதி**- மாசி மாத துதியை

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** - ஆக்கபூர்வமான நாள். உத்தியோகத்தில் எல்லா வேலைகளையும் தாமதமின்றி சுறுசுறுப்பாகச் செய்வார்கள். தொழிலதிபர்கள் தொழிலாளர்கள் உதவியால் அதிக வருமானத்தைப் பெறுவார்கள்.

**ரிஷபம்** - சம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் ஓரளவு வரும். செலவுகளும் அதிகமாகும். வியாபாரம் ஏற்றமும், இறக்கமுமாக நடக்கும். பெற்றோர்கள் வழியில் வைத்தியச் செலவுகள் ஏற்படும்.

**மிதுனம்** - அனுகூலமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். சுபகாரியப் பேச்சுகள் என்று வீடு கலகலப்பாக இருக்கும்.

**கடகம்** - கவலையான நாள். வருமானம் குறையும். அரச ஊழியர்கள் உடன் பணிபுரிபவர்களுடன் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல்கள் உண்டாகும்.

**சிம்மம்** - மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வரவும், செலவும் சரிசமமாக இருக்கும். உத்தியோகத்தர்களுக்குக் கூடுதல் வேலையுடன் அலைச்சல்களும் அதிகமாகும்.

**கன்னி** - உயர்வான நாள். பணவரவு அதிகரிக்கும். மாணவர்கள் ஊக்கமாகக் கல்வி பயில்வார்கள். வியாபாரிகள் கொள்முதலையும் உயர்த்தி, நல்ல பயனையும் அடைவார்கள்.

**துலாம்** - இன்பமான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்பத்தில் இனிய நல்லுறவு நிலவும். இதுவரை தடை, தாமதத்துடன் இருந்து வந்த சுபகாரியப் பேச்சுகள் இனிதே நடக்கும்.

**விருச்சிகம்** - துயரமான நாள். தனவரவு குறையும். வியாபாரிகளுக்குப் போட்டிகள் அதிகரிப்பால் உத்தியோகத்தர் சிலர் கவனக்குறைவால் தொழிலை இழக்க நேரலாம்.

**தனுசு** - சம பலன்கள் காணப்படுகின்றன. பொருள்வரவு சுமாராக இருக்கும். பிள்ளைகளால் தொல்லைகள் உண்டாகும். தேவையற்ற செலவுகளும், வைத்தியச் செலவுகளும் உண்டாகும்.

**மகரம்** - மேன்மையான நாள். பொருளாதாரத்தில் நிறைவு நிம்மதி, மகிழ்ச்சி உண்டாகும். நோய், போட்டி, பொறாமைகள் நிவர்த்தியடையும். சிலருக்குத் தெய்வ தல யாத்திரையும், தரிசனமும் ஏற்படலாம்.

**கும்பம்** - அதிஷ்டமான நாள். தனலாபம் பெருகும். முயற்சிகள் வெற்றியடையும். ஆரோக்கியத்தில் தெளிவு உண்டாகும்.தொழில் வகையில் முன்னேற்றமும், வாகன வசதிகளும் கிட்டும்.

**மீனம்** - அலைச்சல் மிகுந்த நாள். படித்துமுடித்த சிலர் அரச வேலைதேடி அலைவார்கள். சிலர் கொடுத்த கடனைத் திரும்பப் பெற அலைந்து திரிவார்கள். பெற்றோர் பிள்ளைகளுக்கு உரிய பாடசாலை தேடி அலைவர்.

**சந்திராட்டமநாள்: புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இன்று நற்கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# நாளை மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை -

**யாழ். பிரதேசத்தில்** - நாவாந்துறை, பொம்மைவெளி, சூரியவெளி, சோனகதெரு, அராலி வீதி, செழியன் வீதி, பூதர்மடம், கோப்பாய் சந்தி, மானிப்பாய் வீதி, கைதடி வடக்கு, இருபாலைச் சந்தி, இருபாலை பழைய வீதி, வட்டக்குளம், கட்டைப்பிராய், கல்வியங்காடு, இலங்கைநாயகி, கல்வியங்காடு சந்தி, ஆடியபாதம் வீதி, நாயன்மார்கட்டு, இராமலிங்கம் வீதி, முடமாவடி கிளிகடை சந்தி, GPS றோட், கோப்பாய் பொலிஸ், பாற்பண்ணை, திருநெல்வேலி சந்தை, கலாசாலை வீதி, பலாலி வீதியின் ஒரு பகுதி, மயிலிட்டி, தையிட்டி, வறுத்தலைவிளான், வீமன்காமம், பலாலி, வல்லிபுரம், உபயகதிர்காமம், புனிதநகர், கற்கோவளம், மாதனை, நெல்லண்டை, பருத்தித்துறை வெளிச்சவீடு, சிவப்பிரகாசம், 3 ஆம் குறுக்குத்தெரு மற்றும் 4 ஆம் குறுக்குத்தெரு பிரதேசம், கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை, பலாலி இராணுவத் தலைமைக் காரியாலயம், மயிலிட்டி கரிசன் 5 ஆவது பொறியியல் படைமுகாம், பலாலி இலங்கை விமானப்படை முகாம், மயிலிட்டி கரிசன் 5 ஆவது பொறியியல் படைமுகாம் (புதியது), பலாலி விமானப்படை ஓய்வுகால விடுதி ஆகிய இடங்களிலும் -

**கிளிநொச்சிப் பிரதேசத்தில்** - உண்ணாப்பிலவு, முல்லைத்தீவு நகரம், கள்ளப்பாடு, வண்ணாங்குளம், வட்டுவாகல், செல்வபுரம், அறிவியல்நகர், MAS Active, யுனிச்செலா, பொறியியல் பீடம், விவசாய பீடம், Farm House, North Cargill's Agri Foods, கூல் மென் ஐஸ் தொழிற்சாலை, முல்லைத்தீவு அரசாங்க அதிபர் அலுவலகம் ஆகிய இடங்களிலும் -

**வவுனியா பிரதேசத்தில்** - பசார் வீதி, மில் வீதி, தர்மலிங்கம் வீதி, சந்தை சுற்றுவட்ட வீதி, இலுப்பையடி, கண்டி வீதி (A9 வீதி), முதலாம் மற்றும் 2 ஆம் குறுக்குத்தெரு, மதவுவைத்தகுளம், மூன்றுமுறிப்பு, தவசிக்குளம், குட்செட்றோட், தோணிக்கல், பண்டாரிக்குளம், ஈரப்பெரியகுளம், வேரகம, கற்குண்டமடு, அலுத்கம, அழகல்ல, பகல அழுத்வத்த, புபுதுகம, குருந்துப்பிட்டிய, பூ - ஓயா படை முகாம், ஈரப்பெரியகுளம் படை முகாம், ஈரப்பெரியகுளம் SLBC, கார்கில்ஸ் பூட் சிற்றி, மண்டெரின் ஆடைத்தொழிற்சாலை, Kowloom ஆடைத்தொழிற்சாலை, குளோப் அரிசி ஆலை, விமானப்படை இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் -

**மன்னார் பிரதேசத்தில்** - வெள்ளாங்குளம், கணேசபுரம், தேவன்பிட்டி நீர்ப்பாசன சபை, கணேசபுரம் இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும் -

மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும்என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# தேர்தல் தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப். 17

யாழ். முகாமையாளர் சம்மேளனம் ''உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்: ஒரு கண்ணோட்டம்'' பற்றிய கலந்துரையாடல் ஒன்றினை ஒழுங்கு செய்துள்ளது.

இக்கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூரில் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும்படி யாழ். முகாமையாளர் சம்மேளனம் அழைப்பு விடுத்துள்ளது. (இ)

# ஆலய உற்சவங்கள்

சுன்னாகம், பெப். 17

ஊரெழு, மடத்துவாசல் சுந்தரபுரி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது.

இந்த ஆலய மஹோற்சவம் பன்னிரண்டு தினங்கள் நடைபெறவுள்ளதுடன் எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் வியாழக் கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெற உள்ளன.

★ ★ ★

சுழிபுரம், பெப். 17

சுழிபுரம் கதிர்வேலாயுத சுவாமி கோயில் (பெரியதம்பிரான்) மஹோற்சவம் எதிர்வரும் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர் உற்சவமும் மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (இ)

காலைக்கதிர்
Kalaikkathir





# அரசியல் நெருக்கடி குறைந்த போதும் நிலைமை சுமுகமா?

கொழும்பு குழம்பிப் போய் இருக்கிறது என்கிறார்கள் இங்குள்ள அரசியல் நகர்வுகளை பார்க்கும் ஆய்வாளர்கள்.

நடந்து முடிந்தது வெறுமனே உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள்தான். ஆனால், இதுவரை காலத்தில் இல்லாத அளவுக்கு இந்த உள்ளூராட்சி தேர்தல்கள், பி.பி.ஸி. ஆரம்பத்தில் இருந்தே கூறியது போல, தேசிய மட்ட அரசியலில் உடனடியாகவே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

கிட்டத்தட்ட தேசிய மட்ட அரசியலில் மூன்றாவது இடத்தில் இருக்கும் மஹிந்த ராஜபக் ஷவின் பொதுஜன பெரமுன கட்சி இந்தத் தேர்தலில் பெற்ற வெற்றி, மத்தியில் உள்ள கூட்டணி அரசாங்கத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் பதவி விலக வேண்டும் மீண்டும் தேர்தல் நடக்க வேண்டும் என்று ராஜபக்ஷ வலியுறுத்தியிருந்தார்.

ஆனால், அரசமைப்பின் விதிகள் இப்போதே தேர்தலை நடத்துவதற்கு சிரமமான சூழ்நிலையை உருவாக்கியுள்ளன.

ஆகவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆதரவாளர்களோ ரணில் விக்கிரமசிங்க தோல்விக்குப் பொறுப்பேற்றுப் பதவி விலகினால், அவரது கட்சியில் வேறு யாரையாவது தலைவராக, பிரதமராகக் கொண்டு ஆட்சியமைக்க வேண்டும் என்றும் அப்படியான அரசுக்கு தாம் ஆதரவு வழங்குவோம் என்றும் கூறியுள்ளனர்.

இங்கு அண்மையில் பிரபலமாக பேசப்பட்ட பிணைமுறி ஊழல் விவகாரத்துக்கு பிரதமர் ரணில் மீது குறை



கூறிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் அவரை நிராகரிக்கிறார்கள்.

அவர்களால் ஐக்கிய தேசியக் கட்சியின் இன்னுமொரு முக்கிய தலைவரான கரு ஜயசூரிய கோடி காட்டப்பட்டாலும், அவர் அந்தக் கோரிக்கையை நிராகரித்து விட்டதாக தெரிகிறது.

இந்த நிலையில் ஜனாதிபதியின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தாமே தனியாக ஆட்சியமைக்க வேண்டும் என்று ஜனாதிபதியைக் கேட்டிருக்கிறது.

தமது கட்சியின் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா பிரதமராக வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

**எண்ணிக்கை விளையாட்டு**

இந்த நிலையில்தான் இங்கு யாருக்கு எத்தனை பேர் ஆதரவு என்ற போட்டி ஆரம்பமானது. அதாவது இலங்கை நாடாளுமன்றத்தில் மொத்தம் இருப்பது 225 உறுப்பினர்கள். அதனடிப்படையில் ஒருவர் ஆட்சியமைக்க 113 இடங்களாவது குறைந்த பட்சம் தேவை.

பிரதமர் ரணிலின் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 106 இடங்கள் இருக்கின்றன. இன்னும் 7 பேரின் ஆதரவு அவர்களுக்கு இருந்தால் அரசாங்கத்தை அமைக்க முடியும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே ஆதரவு வழங்குமானால் அவர்களால் எளிதாக ஆட்சியை தொடர முடியும்.

ஆனால், அண்மையை தேர்தலில் வடக்கு கிழக்கில் தமிழர் பகுதிகளில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு ஏற்பட்டுள்ள பின்னடைவு, சிங்கள கட்சிகளாக அவர்களால் வர்ணிக்கப்படும் தேசியக் கட்சிகளை நோக்கி அவர்கள் செல்வதை தடுத்திருப்பதாக தென்படுகிறது. ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியமைக்க ஆதரவுதர அது மறுத்துவிட்டது.

## பதில் கூற அவதானிகள் தயக்கம்; தொடர்ந்து ரணிலின் பாடு எப்படியோ?

எந்தவொரு சிங்களக் கட்சியின் அரசிலும் தாம் அங்கம் வகிக்கமாட்டோம் என்று கூறியுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், தமிழருக்கு நலன் தரும் திட்டங்களுக்கு மாத்திரமே ஆதரவு என்று கூறியுள்ளார்.

**ஆள்களை ஈர்க்கும் படலம்**

மறுபுறம் பார்த்தால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் கூட்டு எதிரணி ஆகியவற்றின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 95மட்டுமே.

ஆகவே அவர்கள் ஆட்சியமைக்க மேலும் பல உறுப்பினர்களின் ஆதரவு தேவைப்படும் சூழ்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து ரணில் அதிருப்தியாளர்களை ஈர்க்க முடியும் என்பது அந்தக் கட்சியின் எதிர்பார்ப்பு.

இதற்காக சில நடவடிக்கைகளை அது ஏற்கனவே ஆரம்பித்துவிட்டது.

மலையகத்தில் ஆறுமுகன் தொண்டைமானின் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்து வந்தாலும், அந்தக் கட்சிக்கு தற்போதைய அரசாங்கம் அமைச்சரவையில் இடம் அளிக்கவில்லை.

ஆனால், இப்போது அவர்களை அழைத்துப் பேசிய ஜனாதிபதி அதற்கான வாக்குறுதியை வழங்கியிருப்பதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வட்டாரங்கள் கூறியுள்ளன.

அந்தக் கட்சியின் முத்து சிவலிங்கம் துணை அமைச்சராகப் பதவி ஏற்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(நேற்றுமுன்தினம் அவருக்கு, ஆரம்பத் தொழிற்துறையை பிரதி அமைச்சர் பதவி வழங்கப்பட்டு விட்டது.)

அதேவேளை தற்போது ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் அரசில் அங்கம் வகிக்கும் தமிழ் முற்போக்கு கூட்டமைப்பும் தாம் யாருக்கு ஆதரவு என்பதை மீள் பரிசீலனை செய்வது போல தென்படுகிறது. ரணில் தரப்பு, மைத்திரி தரப்பு என்று நான்கு தெரிவுகள் தமக்கு முன்பாக இருக்கின்றன எனக் கூறிய அமைச்சர் மனோகணேசன், தமிழருக்கு நன்மை தரும் தரப்பு எது என்பது குறித்து தாம் ஆராய்வதாக கூறுகிறார்.

இவ்வளவு நாளும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவு நிலைப்பாட்டில் இருந்ததாக இவர்கள் பார்க்கப்பட்ட நிலையில், இது அவர்களுக்கு கொஞ்சம் பாதகந்தான்.

**நன்றி பி.பி.ஸி.**

நேற்றுமுன்தினம் பி.பி.ஸியில் வெளியான தகவல்களே இவை. நேற்றிரவு இலங்கை அரசியலில் சிற்சில மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்ற போதும் அரசியல் குழப்பங்கள் முற்றாகத் தீர்ந்து விட்டன என்று கூற முடியாத நிலை நீடிக்கின்றது.



# இரத்மலானை விமான நிலையம்; நீண்டகால அபிவிருத்தித் திட்டம்!




கொழும்பு, பெப். 17

தேசிய மற்றும் சர்வதேச விமானசேவை வசதிகளை செயற்றிறனாக வழங்குகின்ற விமான நிலையமாக இரத்மலானை விமான நிலையம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

இந்த விமான நிலையத்தினை அபிவிருத்தி செய்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ள 2018 ஆம் ஆண்டிலிருந்து 2030 ஆம் ஆண்டு வரையில் செயற்படுத்துகின்ற உபாய முறை திட்டங்கள் அடங்கிய ‘Way to 2030’ நீண்ட கால அபிவிருத்தித் திட்டத்தினை செயற்படுத்துவது தொடர்பில் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா வழங்கிய ஆவணங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



# உலகில் போர்ச்சூழலில் 36 கோடி குழந்தைகள்

## அதிர்ச்சி தரும் ஆய்வுத் தகவல்

உலகளவில் போர் நடைபெறும் பகுதிகளில் ஆறுக்கு ஒரு குழந்தை வாழ்ந்து வருவதாக 'சேவ் த சில்ரன்' என்ற குழந்தைகள் நல அமைப்பு வெளியிட்டுள்ள புதிய அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

போர்ச் சூழலில் வாழுகின்ற குழந்தைகள், இதற்கு முன்னர் 20 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அதிக ஆபத்தில் வாழ்ந்து வருகின்றனர் என்ற இந்த அமைப்பு தெரிவித்திருக்கிறது.

இது நடத்தியுள்ள புதிய ஆய்வில் 35 கோடி 70 லட்சம் குழந்தைகள் போர் மண்டலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றமை தெரிய வந்துள்ளது.

1995 ஆம் ஆண்டு 20 கோடி குழந்தைகளே போர் பகுதிகளில் வாழ்வதில் இருந்து 75 சதவீத வளர்ச்சி ஏற்பட்டிருப்பதை இந்த தரவு கள் காட்டுகின்றன.

சிரியா, ஆப்கானிஸ்தான் மற்றும் சோமா லியா நாடுகள் குழந்தைகளுக்கு மிகவும் ஆபத்தான நாடுகளாக உள்ளன.

பொதுவாக, மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள குழந்தைகள் பெரும்பாலும் போர் நடைபெறும் இடங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

அங்கு வாழும் குழந்தைகளில் 5இல் இரண்டு பேர் போர் நடைபெறும் 50 கிலோமீற்றர் தொலைவில் அல்லது மரண தாக்குதல் நடைபெறும் பிற இடங்களில் வாழ்கின்றனர்.

5இல் ஒருவர் போர் நடைபெறும் இடங்களில் வாழ்கின்றமையால் அவ்வாறான ஆபத்தான பகுதிகளில் ஆபி



ரிக்கா இரண்டாவது இடம் பெற்றுள்ளது.

உலகிலுள்ள வாழும் பாதி குழந்தைகளில் அதாவது 16 கோடியே 50 ஆயிரம் பேர் போர் உருவாக அதிக ஆபத்துள்ள மண்டலங்களில் வாழ்ந்து வருகின்றனர் எனத் தெரிய வந்துள்ளது.

கடுமையான உரிமை மீறல்கள் நடைபெறுவதாக ஐக்கிய நாடுகள் மன்றம் கூறுகின்ற பகுதிகளில் இந்தக் குழந்தைகள் அனைவரும் வாழ்ந்து வருகின்றனர்.

ஐக்கிய நாடுகள் மாமன்றம் மற்றும் பிற ஆய்வு தரவுகளை தன்னுடைய அறிக்கையில் பயன்படுத்தியுள்ள சேவ் த சில்ரன் அமைப்பு, மோதலில் ஈடுபட்டுள்ள படைப்பிரிவுகள் ஒவ்வொன்றும் பதிவு செய்கின்ற தரவுகளில் மாபெரும் வேறுபாடு காணப்படுவதை விமர் சித்திருக்கிறது.

### தங்க பூமியில் பசி, ஊட்டச்சத்து குறைப்பாடால் மடியும் குழந்தைகள்

இந்த அமைப்பின் கவலைகள் ஒருபுறமிருக்க, 2010 ஆம் ஆண்டிலிருந்து கொல்லப்பட்ட மற்றும் ஊனமுற்ற குழந்தைகளின் அதிகரிப்பு 300 சதவீதமாக இருக்கிறது என்று ஐக்கிய நாடுகள் மாமன்றம் உறுதிப்படுத்திய சம்பவங்களின் பதிவுகள் தெரிவிக்கின்றன.

நகரங்களிலும், பெரு நகரங்கிலும் அதிகரித்து வருகின்ற மோதல் போக்கு மற்றும் சமீபத்திய நீண்டகால மற்றும் சிக்கலான ஆயுத மோதல்களும் ஆபத்தான இடங்களில் வாழுகின்ற குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு ஒரு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தீவிரவாத குழுக்களால் திட்டமிட்டு நடத்தப்படும் மனிதநேயப் பணிகளுக்கான தடையும், ஏமன் மற்றும் சிரியா நாடுகளில் காணப்படும் நீண்டகால முற்றுகைகளும் இதற்குக் காரணமாக உள்ளன.

போரிடும்போது முற்றுகை இடுவது மற் றும் அடிப்படை வசதிகள் கிடைக்காமல் பட்டினிக்கு உள்ளாக்கும் வியூகங்கள் அதிகரித்துள்ளன.

இவைகள் குடிமக்களுக்கு எதிராக நடத்தப்படும் போர் ஆயுதமாக பயன்படுத்தப்பட்டு, ஆயுதப் படையிரையும், ஒட்டு மொத்த சமூகத்தினரை சரணடையச் செய்யும் முயற்சியாக கருதப்படுகிறது என இந்தத் தகவல் தெரிவிக்கிறது.

மருத்துவமனை மற்றும் பள்ளிகளில் தாக்குதல்கள் நடத்தப்படுவது வழக்கமாகியுள்ளது.

குழந்தைகளை பாதுகாப்பதற்காக மேம்பட்ட சர்வதேச சட்ட வரையறைகள் இருக்கின்றபோதிலும், உலக அளவில் போரிடுகின்ற நாடுகளில் அதிக கொடூரமான வியூகங்கள் பயன்படுத்தப்படுவதாக சேவ் த சில்ரன் அமைப்பு தெரிவித்திருக்கிறது.

குழந்தைகளை படைவீரர்களாக தேர்ந்தெடுத்துப் பயிற்சி அளிப்பது, குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்முறை இதில் அடங்குகின்றன. ஆனால், பாலியல் துஷ்பிரயோகங்கள் குறித்து தகவல் வழங்குவதில் தயக்கம் காணப்படுவதால் இவை பெரிய அளவில் வெளியே தெரிய வருவதில்லை.

இரசாயன ஆயுதங்கள், நிலக் கண்ணி வெடிகள் மற்றும் கொத்தெறி குண்டுகள் போன்ற சில ஆயுதங்களால் குழந்தைகள் இறப்பதும், ஊனமாக்கப்படுவதும் குறைந்திருந்தாலும், பிற ஆபத்துக்கள் அப்படியேதான் நிலவுகின்றன.

குழந்தைத் தற்கொலைதாரிகளை பயன்படுத்துதல், படையினர் மற் றும் குடிமக்கள் என்ற பாகுபாடின்றி அனைவரையும் அழித்துவிடும் வகையில் வெடிகுண்டுகள், மேம் படுத்தப்பட்ட வெடி பொருள்கள் பரவலாக பயன் படுத்தப்படுகின்றமை அதிகரித்திருப்பதாக இந்த அமைப்பின் அறிக்கை தெரிவித்திருக்கிறது.

> "உலகிலுள்ள வாழும் பாதிக் குழந்தைகளில் அதாவது 16 கோடியே 50 ஆயிரம் பேர் போர் உருவாக அதிக ஆபத்துள்ள மண்டலங்களில் வாழ்ந்து வருகின்றனர் எனத் தெரிய வந்துள்ளது."

காயமடைதல், இறப்பது போன்ற ஆபத்துக்களை எதிர்நோக்குகின்ற இந்த மோதல் பகுதிகளில் வாழும் குழந்தைகள், அடிப்படை சுகாதார, கல்வி வசதிகள் இன்றியும், ஊட்டச்சத்து இல்லாமலும் துன்பப்படுகின்றனர். ★



# அலோசியஸ், கசுன் மீண்டும் விளக்கமறியலில்; பிணை மனுக்களை நேற்று நிராகரித்தது நீதிமன்று!

கொழும்பு, பெப்.17

பேர்பச்சுவரல் ட்ரசரிஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோஷியஸ் மற்றும் அதன் பிரதான நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன ஆகியோரது பிணை மனு நேற்றுக் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்ற நீதிவான் லங்கா ஜயரத்னவால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த இருவரின் விளக்கமறியல் எதிர்வரும் மார்ச் 2 ஆம் திகதி வரை நீடிக்க நீதிமன்ற நீதிவான் மேலும் உத்தரவு பிறப்பித்துள்ளார்.


மத்திய வங்கியின் பிணைமுறி விநியோக மோசடி தொடர்பில் மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி செய்த முறைப்பாட்டுக்கு அமைய, கடந்த 4 ஆம் திகதி குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் இந்த இருவரும் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)



# கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 98

# உன்னைச் சரணடைந்தேன்



தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. 'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.



## ஸ்ரீதரசிங்குடன் மீண்டும் கைதானோம்

(நேற்றைய தொடர்ச்சி)

நாங்கள் இராணுவத் தளபதி ஜானக பெரேராவை கொழும்பில் சந்தித்த சில காலத்தின் பின்னர், அவர் தேர்தல் ஒன்றில் நடந்த குண்டு வெடிப்பில் இறந்து போனார்.

* * *

**கழக இளைஞர்கள் தப்பியது அருந்தப்பு**

இது நடந்து சில காலத்தின் பின்னர் சாவகச்சேரியும் இராணுவத்தால் கைப்பற்றப்பட, யாழ். மக்கள் மீண்டும் ஊர் திரும்பினர். அப்போது கழக இளைஞர்களான பிரசாந்தன், மணிமாறன், ஜெயசீலன் ஆகியோர் இராணுவ முகாமுக்குச் சென்று அங்கிருந்த உயர் அதிகாரியிடம் கம்பன் கோட்டக் கட்டடத்திற்கு உரிமை கோரியிருக்கின்றனர். நல்ல காலம் நாங்கள் இராணுவத் தளபதியைச் சந்தித்து, உண்மையை விளங்கப் படுத்தியிராதுவிட்டிருந்தால் அவர்கள் கதையும் 'செம்மணியில்' தான் முடிந்திருக்கும். துணிந்து சென்று கம்பன் கோட்டக் கட்டடத்தைப் பெற்றுக்கொண்டு நான் யாழில் இல்லாதிருந்த போது, சில காலம் பௌர்ணமி நிகழ்ச்சிகளையும் இவ் இளைஞர்கள் நடத்தினார்கள். அவர்கள் நேர்மையை என் நெஞ்சு பாராட்டியது. அந்நிகழ்வுகளின் அனுபவங்களை அவர்கள்தான் எழுத வேண்டும்.

* * *

## மீண்டும் யாழ். புறப்பட்டோம்

கொழும்பு வாழ்க்கை எனக்கு ஒத்து வரவில்லை. பிரசங்கங்களுக்கூடாக நடக்கும் மக்கள் சந்திப்பு, காலையில் கேட்கும் நல்லூர் மணியோசை, அழகிய கம்பன் கோட்டம் தந்த நிழல், வணங்கிய சிவலிங்கம் இவை எல்லாம் மீண்டும் மீண்டும் நினைவில் வந்து, செயற்கையான கொழும்பு வாழ்வை வெறுக்கச் செய்தன. ரத்தினகுமாருக்கும் யாழில் வேலை போய்விடுமோ எனும் பயம். மீண்டும் யாழ். போவதென முடிவு செய்தோம். வெளிநாடு போகும் எண்ணம் இருந்ததால், குமாரதாசன் எம்மோடு வரவிரும்பவில்லை. யாழ். சென்று வர எவ்வித போக்குவரத்து வசதியும் அப்போது இருக்கவில்லை. இராணுவ விமானத்தில் தான் ஓரிருவர் சென்று வந்தனர். இராணுவத்தினர் சென்று வருகிற விமானம் அது. சிபாரிசின் பேரில் பொதுமக்கள் சிலபேரையும் அதில் அழைத்துச் செல்வார்கள். பலரையும் பிடித்து நானும் ரத்தினகுமாரும் விமானம் மூலம் யாழ். செல்ல ஆயத்தமானோம். அன்று நானும், ரத்தினகுமாரும், டாக்டர் கணேசரட்ணமும் தான், அவ் விமனத்துள் இருந்த பொதுமக்கள். விமானத்தின் பின் பக்கம் திறக்கும், அதற்குள் ஏறவேண்டும். விமானம் பறக்கத் தொடங்கியதும் அப்பின்கதவு தானாக மெல்ல மெல்ல மூடும். புலிகள் எந்நேரமும் தாக்கிவிடுவார்கள் என்ற அச்சம் வேறு. விமானத்தின் நடுவில் ஒரு 'கேபிள் வயர்' கட்டப்பட்டிருந்தது. அதைப்பிடித்தபடி பஸ்ஸில் நிற்பது போல் நின்றுதான் போனோம். ஒரு மாதிரி ஒரு மைம்மல் பொழுதில், எமது கோட்டத்திற்குப் போய்ச் சேர்ந்தோம்.

* * *

**கலைந்து கிடந்த கழகம்**

பளபளக்க நான் வைத்திருந்த கோட்டம், தூசும், இருளும் மண்டிக் கிடந்தது. முடிந்தவரை அப்போதே சுத்தம் செய்தோம். இருண்டு போனதால் நேரம் தெரியவில்லை. எங்கள் வரவேற்பறைச் சுவரில் முன்பு நாம் மாட்டியிருந்த, மணிக்கூடு இருந்த இடத்தில் புதியதொரு மணிக்கூடு மாட்டப்பட்டிருந்தது. 'பற்றரியில்லாமல்' அது ஓடாமல் இருந்தது. அப்போது யாழ்ப்பாணத்தில் 'பற்றரிகள்' வாங்குவது கஷ்டம் என்றபடியால், கொழும் பிலிருந்து 'பற்றரிகள்' வாங்கிச்சென்றிருந்தோம். ரத்தினகுமாரிடம் அந்த மணிக்கூட்டிற்கு, 'பற்றரி' போடச் சொன்னேன். களைத்துப்போயிருந்தபடியால், "இனிப் படுப்பம், காலையில பார்ப்போம்" என்று ரத்தினகுமார் சொல்ல, இரவு படுத்துவிட்டோம். காலையில் பிரசாந்தனும் வந்துவிட்டான்.

* * *

**மீண்டும் உயிர் தப்பினோம்**

பழையபடி துப்புரவாக்கும் பணியைத் தொடங்கினோம். மீண்டும் மணிக்கூட்டிற்கு 'பற்றரி' மாற்றும்படி, ரத்தினகுமாருக்குச் சொன்னேன். எங்களுக்குள் ரத்தினகுமார் கொஞ்சம் நிதானமானவன். எதனையும் ஆலோசித்துச் செய்வான். மணிக்கூட்டைக் கழற்றிய அவன் நிதானமாக அதைத் தூசு துடைத்து, பின்பக்கம் எல்லாம் திருப்பிச் சுத்தம் செய்தான். திடீரென அவன் முகத்தில் அதிர்ச்சி, எங்களை அவசரமாய்க் கூப்பிட்டான். "இந்த மணிக்கூட்டுக்குள் குண்டு வைத்திருக்கிறார்கள். 'பற்றரி' போட்டால் உடன் வெடிக்கும்படி 'செற்' பண்ணியிருக்கிறார்கள்" என்றான். பதறிப் போனோம். நானோ, பிரசாந்தனோ 'பற்றரி' போட முனைந்திருந்தால், எதனையும் பார்க்காமல் உடன் 'பற்றரியைப்' போட்டிருப்போம். எங்கள் மூவரோடு கட்டடமும் அன்று தொலைந்திருக்கும். முருகன் அப்போதும் வந்து எம்மைக் காத்தான். பின்னர் அப்படியே மணிக்கூட்டை ஓரிடத்தில் வைத்து விட்டோம். நாங்கள் திரும்பவும் கொழும்பு வந்த பிறகு, அந்த மணிக்கூட்டைப் பிரித்து ஜெயசீலன் முதலியோர், அக் குண்டினை அப்புறப்படுத்தினார்கள். "யார் வைத்த குண்டு அது?" எனப் பலரும் கேட்டார்கள். அதுவும் அந்த முருகனுக்குத்தான் வெளிச்சம்.

* * *

**கொழும்பில் புதிய வாழ்க்கை தொடங்கினோம்**

குண்டுச் சம்பவம் எங்கள் மனதைப் பெரிதும் பாதித்தது. அப்போது யாழ்ப்பாணத்தில் படுபயங்கரமான சூழ்நிலை, இளைஞர்களை ராணுவம் கண்டபடி கைது செய்தது. மின்சாரமில்லாத இரவுகளில், அங்கங்கு தாய்மாரின் அவலச் சத்தம் கேட்கும். அந்தச் சத்தத்தில் அடி வயிறு கலங்கும். இந்தச் சூழ்நிலையில் இனி வாழ முடியாது என முடிவு செய்தோம். மீண்டும் கொழும்பு திரும்புவதாய் முடிவு எடுத்தோம். கொண்டு போன விமான 'ரிக்கற்றைப்' பயன்படுத்தி, மீண்டும் கொழும்பு வந்திறங்கினோம். எமது வாழ்க்கையிலும் கழக முன்னேற்றத்திலும், கொழும்பில் புதிய அத்தியாயங்கள் திறந்தன. அவற்றைப் பற்றிக் கழக வரலாற்றின் அடுத்த பகுதியில் சொல்கிறேன்.

* * *

## நிறைவில் சிலர் பற்றிய எண்ணங்கள்...

**ஆதரவு தந்த மதத் தலைவர்கள்**

எமது கழக முயற்சிகளை அங்கீகரித்து, பல மதத் தலைவர்களும் எமக்குப் போதிய ஆதரவினை நல்கினர். அவர்களைப் பற்றியும் ஓரிரு வார்த்தைகள் சொல்லவேண்டும். மணி ஐயர் என்று முன்பு சொல்லப்பட்டவரான, நல்லை ஆதீனத்தின் ஸ்தாபக குரு முதல்வரான, சமாதி அடைந்த ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், கழகத்திற்குத் தந்த பேராதரவினைப் பற்றி முன்னரே சொல்லி இருக்கிறேன். அவரின் பின் ஆதீனப் பொறுப்பை ஏற்று நடத்திவரும், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானதேசிக பரமாச்சாரிய சுவாமிகளும், எமது விழாக்களுக்கான ஆதரவினை மனமுவந்து நல்கினார். அது போலவே கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவர்களாய் இருந்த, பேராயர் தியோகுப்பிள்ளையும், பேராயர் சௌந்தரநாயகமும், தென்னிந்தியத் திருச்சபையின் தலைவர்களாய் இருந்த, பேராயர் அம்பலவாணர், பேராயர் ஜெபநேசனும் எங்கள்மேல் அன்பும், அக்கறையும் காட்டியதோடு, பலதரம் எமது கம்பன் விழாக்களிலும் கலந்து உரையாற்றி, கழகத்தைப் பெருமைப்படுத்தினர். அப் பெரியோர்கள் தந்த ஆதரவினையும் மறக்க முடியாது.

* * *

**துணைசெய்த துணைவேந்தர்கள்**
**பேராசிரியர் க.கைலாசபதி**

யாழ். பல்கலைக்கழகம் ஆரம்பத்தில் கெம்பஸ் ஆகவே இருந்தது. அப்போது துணைவேந்தர் என்ற பதவி இருக்கவில்லை. தலைவர் என்றிருந்த அப்போதைய பதவியைப் பேராசிரியர் க.கைலாசபதி வகித்தார். ஈழத்தின் தமிழுலகத்தைத் தமது விமர்சனப் பார்வையால் உலக அரங்கில் ஏற்றியவர் இவர். பெரும் படிப்பாளி. கழகம் வளர்ச்சியுறாக் காலத்திலேயே எமது முயற்சிகளை ஊக்குவித்தவர். அவருடனான தொடர்பு பற்றி முன்பே சொல்லியிருப்பதால், இவ்விடத்தில் அதைத் தவிர்க்கிறேன்.

* * *

**பேராசிரியர் சு.வித்தியானந்தன்**

கம்பன் கழகம் யாழ். பல்கலைக்கழகத்தின் நான்கு துணைவேந்தர்களைச் சந்தித்தது. கழகம் ஆரம்பிக்கப்பட்ட போது, பல்கலைக்கழகத் துணைவேந்தராய் பேராசிரியர் சு.வித்தியானந்தன் இருந்தார். அவருடனான எமது தொடர்பு அதிக நெருக்கமானதாய் இருக்கவில்லை. ஆனாலும், அந்த ஆரம்ப நிலையிலேயே எம்மை அவர் கணித்து நடந்தார். எமது கம்பன் கோட்டக் கட்டடத்தின் அடிக்கல்லை நட்டவர் இவரே.

* * *

**பேராசிரியர் துரைராஜா**

பேராசிரியர் வித்தியானந்தனின் மறைவிற்குப் பின்பு, பொறியியலாளரான பேராசிரியர் துரைராஜா யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராய் வந்தார். மிகப் பெரிய சான்றோர் அவர். எளிமையும், பணிவும் நிறைந்தவர் அவர். பெரும் ஆற்றலாளர். அவரது பெயரில் ஒரு 'தியரி'யே இருப்பதாகச் சொல்வார்கள். வாகனப் போக்குவரத்து இல்லாத அந்தக் காலத்தில், பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்திற்குத் தினமும் சைக்கிளில் வந்து மற்றவர்களை வியக்க வைத்தார் இவர். எங்கள் கழகத்தின்மீது பெரு நம்பிக்கையும், மதிப்பும் வைத்திருந்தார். எங்களின் விழாவில் முதல் நாளன்று, பட்டமளிப்பு அங்கியுடன் வந்து, விருதாளர்களுக்கு விருதுகளை வழங்கி எங்கள் கழகத்தின் பெறுமதியை மிக உயர்த்தினார். கழகத்தின் எந்த அழைப்பையும் அவர் என்றும் நிராகரித்ததில்லை. எனது ஆலய தொடர் சொற்பொழிவு ஒன்றின் இறுதிநாளில் தனிப்பட்ட ரீதியில் வந்து என்னை வாழ்த்தினார். அவரது திடீர் மறைவு எங்களுக்கு பேரிழப்பாயிற்று. அவர் மறைவுக்குப் பின்னர் அவருக்கு 'மகரயாழ்' விருதினை 1994 ஆம் ஆண்டு விழாவில் வழங்கினோம்.

* * *

(தொடரும்...)

காலைக்கதிர் Kalaikkathir



# நிப்பொன்மாரு கப்பல் பயணத்தில் இலங்கைக்கு வந்துள்ள இளைஞர் பிரதிநிதிகள் ஜனாதிபதி மைத்திரியுடன் சந்திப்பு!



கொழும்பு, பெப். 17

உலக நட்புறவு நிப்பொன் மாரு கப்பல் சுற்றுப் பயண நிகழ்ச்சித்திட்டத்தில் இலங்கைக்கு வருகை தந்துள்ள இளைஞர், யுவதிகள் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்தனர்.

இலங்கை உட்பட 11 நாடுகளை சேர்ந்த 242 இளைஞர் யுவதிகளின் இதில பங்கு கொண்டுள்ளனர்.

ஜப்பான் நாட்டின் அமைச்சரவை அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த உலக நட்புறவு கப்பல் சுற்றுப் பயணம் கடந்த ஜனவரி 29 ஆம் திகதி ஜப்பானில் ஆரம்பமானதுடன், கடந்த 11 ஆம் திகதி இக்கப்பல் மூன்று நாட்கள் இந்தியாவில் நங்கூரமிட்டு 13 ஆம் திகதி மீண்டும் தனது பயணத்தை ஆரம்பித்து நேற்றுமுன்தினம் இலங்கையை வந்தடைந்தது.

இலங்கையில் நடைபெறும் பல்வேறு இளைஞர் நிகழ்ச்சித்திட்டங்களின் பின்னர் இந்தக் கப்பல் எதிர்வரும் 17 ஆம் திகதி பிற்பகல் மீண்டும் ஜப்பான் நோக்கி பயணமாகும்.

இளைஞர் யுவதிகள் மத்தியில் கலாசார, சமூக மற்றும் அரசியல் ரீதியான விழிப்புணர்வை ஏற்படுத்தல், பரஸ்பர புரிந்துணர்வை கட்டியெழுப்புதல், தலைமைத்துவ பயிற்சியை வழங்குதல் ஆகியவை இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும்.

ஜனாதிபதி அலுவலகத்திற்கு வருகை தந்த இளைஞர் பிரதிநிதிகளை ஜனாதிபதி அவர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றதுடன், அவர்களுக்கு நினைவுச் சின்னங்களையும் வழங்கினார்.

## பொலிஸ் அதிகாரி ஒருவர் மாரடைப்பால் உயிரிழப்பு!

மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியேகஸ்தர் ஒருவர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்றைய தினம் அதிகாலை இடம்பெற்றது என பொலிஸார் தெரிவித்தனர்.

மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரி நேற்று அதிகாலை 1.50 மணியளவில் தனக்கு நெஞ்சு வலிப்பதாக கடமையிலிருந்த பொலிஸ் உத்தியோகத்தரிடம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து இந்த பொலிஸ் உத்தியோகத்தர் மானிப்பாய் பொலிஸாரால் அவசரமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்டார்.

அழைத்து வரப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் யாழ். போதனா வைத்தியசாலையின் நோயாளர் அனுமதி பதிவறையில் பதிவினை மேற்கொள்ளும்போது சரிந்து விழுந்துள்ளார்.

இதனையடுத்து அவரை பரிசோதித்த வைத்தியர் அவர் மாரடைப்பால் உயிரிழந்துவிட்டார் என தெரிவித்துள்ளார்.

மாத்தளை பகுதியை சேர்ந்த 46 வயதுடைய லலித் மொகான் சந்திரசேன என்ற பொலிஸ் கொஸ்தாபலே இவ்வாறு மரணமடைந்துள் ளார்.

இந்த மரணம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடாத்தி வருகின்றனர்.

## சுற்றுலாப்பயணிகளுக்காக அழகுபடுத்தப்பட்டுள்ள பருத்தித்துறை சக்கோட்டை கடல் பிரதேசம்!






பருத்தித்துறை, பெப். 17

பருத்தித்துறை சக்கோட்டை கடல் பிரதேசத்தை பார்வையிடும் சுற்றுலா பயணிகளுக்கான வசதிகள் யாழ். பாதுகாப்பு படைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாரச்சியின் பணிப்புரைக்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் மற்றும் 55 ஆவது படைப் பிரிவின் இராணுவ ஒத்துழைப்புடன் இந்த கடல் பிரதேசத்திலுள்ள பொலித்தீன் மற்றும் கடலோர பிரதேசங்களிலுள்ள குப்பைகூழங்கள் அகற்றப்பட்டன.

மேலும், இந்தப் பிரதேச வளாகம் இராணுவத்தினரது பூரண ஒத்துழைப்புடன் அலங்கரிக்கப்பட்டு தேசிய கொடிகள் ஏற்றி அண்மையில் யாழ் பாதுகாப்பு படைத்தளபதியால் திறந்து வைக்கப்பட்டது.

இந்தப் பிரதேச வளாகத்தை அழகுபடுத்துவதன் மூலம் சுற்றுலா பயணிகள், விற்பனையாளர்கள் தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு உறுதுணையாயுள்ளது.

யாழ். பாதுகாப்பு படைத் தளபதியின் பணிப்புரைக்கமைய 55 ஆவது படைப் பிரிவின் படைத் தளபதி பிரிகேடியர் ஜயந்த குணரத்ன தலைமையில் இந்த பணிகள் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிகழ்வில், 55 ஆவது படைப்பிரிவின் இராணுவ சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் இந்தப் பிரதேச வாழ்மக்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கைச் சிறையில் இருந்த 109 இந்திய மீனவர் விடுதலை!



எல்லை தாண்டி கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 109 இந்திய மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சட்ட மா அதிபரின் பணிப்புரைக்கமைவாக ஊர்காவற்றுறை மற்றும் பருத்தித்துறை நீதி மன்றங்களினால் இந்த 109 மீனவர்களும் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

தமிழகம் இராமநாதபுரம், புதுக்கோட்டை, ஜகதாபட்டினம், கோட்டைப்பட்டினம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் கடந்த டிசெம்பர் மாதமளவில் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

நேற்றையதினம் ஊர்காவற்றுறை நீதிமன்றினால் 79 மீனவர்கள் மற்றும் பருத்தித்துறை நீதிமன்றினால் முப்பது மீனவர்களும் விடுவிக்கப்பட்டனர்.

இந்த மீனவர்கள் நேற்று யாழ். இந்திய உயர்ஸ்தானிகராலய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இவர்களை ஓரிரு தினங்களில் தமிழ்நாட்டிற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகர் நடராஜன் தெரிவித்தார். (க)

## மின் கட்டணப் பட்டியலை பார்த்து முள்ளிவாய்க்கால் மக்கள் அதிர்ச்சி!



முள்ளிவாய்க்கால் பகுதியில் நேற்று வழங்கப்பட்ட மின் கட்டணப் பட்டியலை பார்வை யிட்ட அந்தப் பகுதி மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

சுமார் ஒரு வருடத்திற்கு பின்னர் இலங்கை மின்சார சபையினால் முள்ளிவாய்க்கால் பகுதியில் நேற்று மின் கட்டணப் பட்டியல் வழங்கப்பட்டுள்ளது.

அதில் மக்கள் கட்ட வேண்டிய மொத்த தொகையாக 22 ஆயிரம் ரூபாவிற்கும் அதிகமான பணம் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட வேண்டிய மின் கட்டணப் பட்டியலை மின்சார சபை 15 மாதங்கள் கழித்து நேற்று வழங்கியுள்ளது.

இதனால், மொத்த தொகையை செலுத்துவதில் பொதுமக்கள் பெரும் நெருக் கடியை சந்தித்துள்ளனர்.

இதேவேளை, நாளாந்த கூலித்தொழிலை நம்பி வாழும் ஏழைகளின் வீடுகளில் மின்சார இணைப்பு துண்டிக்கப்படும் நிலை காணப்படுகிறது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலையில், பொது மக்களுக்கு வழங்கப்பட்ட மின் கட்டணப் பட்டியலிலுள்ள மொத்த தொகையை கட்டம் கட்டமாக செலுத்துவதற்கு சம்மந்தப்பட்ட அதிகாரிகள் வழிவகுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### வினாத்தாள் 13 இன் II இன் தொடர்ச்சி...

55. குப்பை கூடைகளில் இரும்பு போன்ற உலோகப் பொருட்களை இடுவதற்கு பயன்படும் நிறம்?

1. கறுப்பு 2. சிவப்பு 3. பச்சை 4. மஞ்சள்

56. வளையமுள்ள மிக கோள்?

1. வியாழன் 2. சனி 3. செவ்வாய் 4. புவி


57.  C எனும் எழுத்து குறிக்கும் ஆறு?

1. வளவகங்கை 2. நில்வளவை கங்கை
3. ஜின் கங்கை 4. மகாவலி கங்கை

58.  இக் கருவி எவ்வகை?


1. தோற்கருவி 2. கஞ்சக்கருவி
3. துளைக்கருவி 4. காற்றுக்கருவி

59. பின்வரும் படங்களில் கலப்பு குறுக்கு பற்று?




(28 புள்ளிகள்)


60. நான்கு கடத்திகளை மட்டும் பயன்படுத்தி மின்சுற்றை பூரணப்படுத்துக.



61. பின்வரும் இசைக்கருவிகளில் இழையக் கருவியாக விளங்குவது?

1. மத்தளம் 2. வீணை 3. புல்லாங்குழல் 4. தாளம்.

## அபாய எச்சரிக்கை குறியீடுகள்








# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

வினாத்தாள் 13

தரம்-5 பிரபல ஆசிரியர் நேரம்- 1 மணித்தியாலம் 15 நிமிடம்

### வினாத்தாள் 13 இன் II இன் தொடர்ச்சி...

26. 10 l 750 mL சோடாப் பானத்தில் இருந்து 250 Ml சோடாப் போத்தல்கள் எத்தனை தயாரிக்கலாம்?

..........................................................................................


27. அட்டவணையை அவதானித்து இடைவெளி நிரப்புக.

| பொருள் | எண்ணிக்கை | ஒன்றின் விலை | மொத்த விலை |
|---|---|---|---|
| பந்து | 2 | ரு 60.00 | ரு 120.00 |
| உபகரணப்பெட்டி | 3 | ரு........ | ரு 240.00 |
| புத்தகம் | 2 | ரு 100.00 | ரு 200.00 |
| | | மொத்தம் | |

28. 12 cm நீளமான 6 பேனாக் குழாய்களை ஒன்றோடு ஒன்று ஒவ்வொன்றினூடாக இணைக்கப்படும் போது 5 Cm ஒன்றின் மீது வைத்து இணைக்கப்படுகிறது. இறுதியாக இணைக்கப்பட்ட மொத்த பேனைகளின் நீளம் யாது?

..........................................................................................

29. $\frac{3}{4} + \frac{1}{1}$

30. 


இங்கே A பாத்திரம் மூலம் 4 தடவை பெரிய பாத்திரத்திற்கு ஊற்றிய பின் மேலும் நிரப்புவதற்கு B பாத்திரத்தால் எத்தனை தடவை முழுமையாக நிரப்ப ஊற்ற வேண்டும்?

..........................................................................................

31. ஒரு பெட்டியில் 24 பழங்களை அடுக்க முடியும். எனின் 250 பழங்களை அடுக்க தேவையான பெட்டிகள் எத்தனை?

.......................................................................................... (15x2=30 புள்ளி )

**சரியான விடையின் கீழ் கோடிடுக.**

32. எட்டுக் கால்களையுடைய பிராணிகளில் ஒன்று?

1. நண்டு 2. தேள் 3. குளவி 4. சிலந்தி

33. இலங்கைக்கு உரித்தான பறவைகளில் ஒன்று?

1. மயில் 2. காட்டு செண்பகம் 3. கிவி 4. காகம்

34. மஞ்சள் நிற மரக்கறிகள், பழங்களில் காணப்படும் போசணைக் கூறு?

1. விற்றமின் A 2. விற்மின் B 3. விற்றமின் C 4. விற்றமின் D

35. பிரதான வீதிகளில் A என அடையாளப்படுத்துவது போல அதி வேக நெடுஞ்சாலை குறிக்கும் எழுத்து?

1. E 2. B 3. S 4. P

36. சர்வதேச செய்தி நிறுவனங்களில் ஒன்று?

1. ரூபவாகினி 2. ஹிரு F.M 3. BBC 4. சக்தி F.M

37. இலங்கை பெற்றோலிய கூட்டுத் தாபன இலச்சினை?


1. Sri Lanka Telecom Mobitel 2. 3. 4.

38. ISBN எனும் குறியீடு பொருத்தப்பட்டிருப்பது?

1. கதைப் புத்தகம் 2. அடைக்கப்பட்ட ரின்மீன்கள் 3. பதியப்பட்ட புத்தகம் 4. பதியப்பட்ட பற்பசை

39. சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் போது அறவிக்க வேண்டிய தொலைபேசி 1929 என்பது போல இலஞ்ச ஒழிப்பு சம்பந்தமாக அறிவித்தல்?

1. 118 2. 1969 3. 1951 4. 1954

40. இவ்விளையாட்டு  குறிப்பது?

1. தாயம் 2. பல்லாங்குழி 3. சடுகுடு 4. ஏணியும் பாம்பும்

41. இலங்கை அமைந்திருப்பது பற்றிய பிழையான கூற்று?

1. இந்தியாவிற்கு தெற்கே ஆகும்.
2. ஆபிரிக்க நாடுகளுக்கு கிழக்கே ஆகும்.
3. இந்து சமுத்திரத்தின் மத்தியில் ஆகும்.
4. மாலைதீவுக்கு கிழக்கே ஆகும்.

42. இலங்கை கலைத்துவ படைப்புக்களில் ஒன்றான சந்திரவட்டக்கல்லில் காணப்படும் விலங்குகளில் ஒன்று?

1. கீரி 2. அன்னம் 3. புறா 4. மயில்



வினாத்தாள் 13 இன் II இன் தொடர்ச்சி...

43. இரண்டாம் வகை நெம்புகோலுக்கு உதாரணம்?

1. பாக்குவெட்டி 2. குறடு 3. கத்தரிக்கோல் 4. தணல் இடுக்கி

44.  இவ் உரு குறிப்பது?

1. பொருட்கள் விற்பனை நிலையம்
2. சிற்றுண்டிச்சாலை 3. வீட்டுத்தளபாடம்
4. இரும்பினால் செய்யப்படும் பொருட்கள் விற்கும் இடம்

45. சிவப்பு, நீலம் ஆகிய நிறங்களை சம அளவு கலப்பதால்?

1. ஊதா 2. பச்சை 3. நீல சிவப்பு 4. கபிலம்

46. இயற்கை அனர்த்தங்களில் அடங்காதது?

1. வெள்ளப் பெருக்கு 2. சூறாவளி 3. காடழிப்பு 4. மின்னல்

47. அமெரிக்கா ஜனாதிபதிகளில் ஒருவர்?

1.நரேந்திரமோடி 2. ரூஸ்வேல்ட் 3. அப்துல்கலாம் 4. மைத்திரிபாலசிறிசேன

48. இலைகளினை பயன்படுத்தி கூடுகட்டும் பிராணி?

1. தையல்சிட்டு 2. புளுணி 3. நாரை 4. காகம்

49. தற்போது கட்டாயக் கல்வி வயது?

1. 5-14 வயது 2. 1-16 வயது 3. 5-16 வயது 4. 5-18 வயது

50. வாகன இலக்க தகட்டில் CP HA 4359 என பதியப்பட்டிருக்கிறது இது எந்த மாகாணத்தில் பதியப்பட்டது?

1. வடக்கு 2. மத்திய 3. தெற்கு 4. வடமத்திய

51. வாகனச் சாரதி ஒருவர் வீதியால் வாகனம் செலுத்தும் போது கட்டாயம் வைத்திருக்க வேண்டியது?

1. அடையாள அட்டை 2. காப்புறுதி பத்திரம்
3. வாகன அனுமதி பத்திரம் 4. சாரதி அனுமதிப் பத்திரம்

52. பொதுச்சுகாதார பரிசோதகரை குறிக்கும் பதம்?

1. D.M.O 2. PHI 3. MOH 4. AGA

53. தெறியோட்டை தைக்க பயன்படும் தையல்?

1. கம்பளி 2. பெருநூலோடி 3. விஸ்பம் 4. சோம்

54. இலங்கை தேசிய கீதத்திற்கு இசையமைத்தவர்?


1. ஆனந்த சமரக்கோன் 2. சமரவீர 3. மு.நல்லதம்பி 4. C.W.W கன்னங்கரா

# காதலர் தினத்தில் இதய வடிவத்தில் பறந்து அசத்திய பிரிட்டன் விமானம்

லண்டன், பெப்.17

காதலர் தினத்திற்காக பிரிட்டனைச் சேர்ந்த விமான நிறுவனம் ஒன்று வானத்தில் சுமார் 100 கிலோமீற்றர் பயணம் செய்து இதய வடிவத்தை வரைந்து கொண்டாடியுள்ளது.

உலகம் முழுவதும் கடந்த புதன் கிழமை காதலர் தினம் கொண்டாடப் பட்டது. அதைக் கொண்டாடும் வகையில் லண்டனைச் சேர்ந்த விமானி ஒருவர்



வானத்தில் இதயம் வரைந்து இருக்கிறார். பிரிட்டனைச் சேர்ந்த விர்ஜின் அட்லான் டிக் விமான நிறுவனத்திற்குச் சொந்த மான விமானம் மூலம் அவர் இந்தச் செயலைச் செய்துள்ளார்.

அந்த ஏர்பஸ் ஏ -330 என்ற விமா னம் லண்டனில் உள்ள கட்விக் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டு சுமார் 100 கிலோமீற்றர் தூரம் சென்று கட லுக்கு மேலே 2 மணி நேரம் சுற்றி இதய வடிவத்தை வரைந்திருக்கிறது. பின் மீண்டும் வந்த இடத்திற்கே திரும்பி இருக்கிறார்கள்.

அந்த நிறுவனத்தின் வானக் கட் டுப்பாட்டுக்குழு இது தொடர்பான வீடி யோவை வெளியிட்டிருக்கிறது. விமானி எப்படி கச்சிதமாக, மற்ற விமானங்களில் மோதாமல் இதயத்தை வரைந்தார் என் றும் அதில் கூறப்பட்டுள்ளது. (பு)

# எத்தியோப்பியா பிரதமர் திடீரென ராஜினாமா



அடிஸ் அபாபா, பெப்.17

கிழக்கு ஆபிரிக்க நாடான எத்தியோப்பியாவின் பிரதமர் ஜலி மரியாம் தேசாலென் திடீரென ராஜினாமாச் செய்துள்ளார்.

எத்தியோப்பியா, ஆபிரிக்கக் கண்டத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள ஒரு நாடு ஆகும். ஏறத்தாழ 100 மில்லியன் மக்கள் வாழும் இந்நாடு உலகின் நிலம் சூழ் நாடுகளில் மிகுந்த மக்கள் தொகை கொண்ட நாடும், ஆபிரிக் காவிலேயே நைஜீரியாவுக்கு அடுத்ததாக இரண்டாவது அதிக மக் கள் தொகை கொண்ட நாடும் ஆகும். அடிஸ் அபாபா இதன் தலைநகரமும், மிகப்பெரிய நகர மும் ஆகும்.

அந்நாட்டின் பிரதமராக ஜலிம ரியாம் தேசாலென் கடந்த 2012 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப் பட்டார். அவரது ஆட்சிக்கு எதிராக கடந்த மூன்று ஆண்டுகளாக போராட்டங்கள் நடைபெற்று வரு கின்றன. அந்நாட்டின் வளர்ச்சி நன்மைகள் சாதாரண மக்களுக்கு சரியாக கிடைக்கவில்லை எனக் குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இந்த நிலையில், எத்தியோப் பியா பிரதமர் ஜலிமரியாம் தேசா லென் நேற்று முன்தினம் திடீரென ராஜினாமா செய்துள்ளார். இது தொடர்பாக அந்நாட்டு அரசுத் தொலைகாட்சி வெளியிட்டுள்ள செய்தியில், எத்தியோப்பியாவில் நிலவிவந்த குழப்பங்களுக்கு தீர்வுகாண பிரதமர் ஜலிமரியாம் தேசாலென் நீண்ட காலமாக முயற்சி செய்துவந்தார். ஆனால் அவரது முயற்சிகள் தோல்விய டைந்தன. அதனால்தனது பிரதமர் பதவியை ராஜினாமாச் செய்துள் ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

புதிய பிரதமர் தேர்ந்தெடுக்கப் ப டும்வரை ஜலிமரியாம் தேசா லென் பிரதமர் பதவியில் நீடிப்பார் எனவும் அந்தச் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# தென்னாபிரிக்க புதிய அதிபராக ராமபோசா!

கேப்டவுண், பெப்.17

ஊழல் குற்றச்சாட்டில் சிக்கிய ஜேக்கப் ஷுமா அதிபர் பதவியை ராஜினாமா செய் ததை அடுத்து, புதிய அதிபராக துணை அதி பர் சிரில் ராமபோசா நேற்றுத் தேர்வு செய் யப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்காவின் அதிபராக ஜேக்கப் ஷுமா . கடந்த 2009ஆம் ஆண்டு முதல் இருந்து வந்தார். இவர் மீது பல ஊழல் குற்றச்சாட்டுகள் உள்ளன. தென்னாபிரிக்கா வின் உயர் நீதிமன்றில் அவர் மீது வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிமன்றம் அவர் மீதான 78 ஊழல் வழக்குகள் நிரூபிக்கப் பட்டன என அறிவித்தது. சமீபத்தில் இந்தி யரான குப்தா குடும்பத்துடன் இணைந்து ஜேக்கப் ஷுமா ஊழல் செய்ததார் எனவும் குற்றம் சுமத்தப்பட்டது. அதை இருவரும் மறுத்திருந்தனர்.

இதுபோன்ற ஊழல் குற்றச்சாட்டுகளில் சிக்கித் தவிக்கும் ஷுமாவுக்கு ஆளும் ஏ.என்.சி கட்சி எம்.பி.க்களும் எதிராக இருந் தனர். நாடாளுமன்றத்தில் நம்பிக்கை இல் லாப் பிரேரணை கொண்டு வந்து அவரைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும் எனக் கட்சி யில் குரல் எழுந்தது.

ஆனால், அதற்கு முன்னதாக அதிபர்



பதவியை ஷுமா ராஜினாமா செய்ய கட்சித் தலைமை வலியுறுத்தியது. முதலில் மறுத்த ஷுமா பின்னர் வேறு வழியின்றிப் பதவி விலகினார். இந்த நிலையில், புதிய அதிபரைத் தேர்வுசெய்வதற்கான நாடாளுமன்றக் கூட்டம் நேற்று இடம்பெற்றது.

துணை அதிபரான சிரில் ராமபோசா அதி பர் வேட்பாளராக முன்னிறுத்தப்பட்டார். அவரை எதிர்த்து வேறு யாரும் போட்டியி டாமையால் அவர் அதிபராகத் தேர்வு செய்யப் பட்டார். (பு)

# அமெரிக்காவை சமாளிக்கவே எங்கள் மீது நடவடிக்கை

அமெரிக்காவையும் இந்தியாவையும் திருப்திப் படுத்தவே தங்கள் இயக்கம் மீது பாகிஸ்தான் அரசு நட வடிக்கை எடுத்துள்ளது என ஹபீஸ் சயீத் கூறியுள்ளார்.

மும்பைத்தாக்குதலுக்கு முறையாகச் செயற்படும் ஹபீஸ் சயீத்தை தேடப்படும் குற்றவாளியாக சமீபத்தில் ஐ.நா. அறிவித்தது. பாகிஸ் தானில் இருந்து செயற்ப டும் லஷ்கர்-இ-தொய்பா அமைப்பின் நிறுவுநரும் ஜமாத் உத் தவா அமைப் பின்தலைவருமான ஹபீஸ் சயீத் தவிர லஷ்கர் இ தொய்பா, ஜமாத் உத் தவா மற்றும் ஹர்கட்-உல் முஜா ஹிதீன் உள்ளிட்ட அமைப் புகளுக்கும் தடை விதிக் கப்பட்டது.



இதேபோல் ஐ.நா. பட்டி யலில் உள்ள தடை செய்யப் பட்ட அமைப்புகளை பாகிஸ் தான் அரசும் தடை செய்ய வேண்டும், ஹபீஸ் சயீதை தீவிரவாதியாக அறிவிக்க வேண்டும் என அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட நாடுகள் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வந்தன. இதை யடுத்து, பாகிஸ்தான் அரசு ஹபீஸ் சயீத்தை தீவிரவாதி யாக அறிவித்து அவருக்கு எதிரான சட்ட நடவடிக் கையை முடுக்கி விட்டுள் ளது. ஹபீஸ் சயீதின் மத போதனை மையங்கள் மற் றும் மருத்துவ மையங் களை பாகிஸ்தான் கைப் பற்றியது.

இந்தத் திடீர் நடவடிக்கை குறித்து ஹபீஸ் சயீத் கூறு கையில்,

அமெரிக்காவையும் இந் தியாவையும் திருப்திப்படுத் தும் வகையில் பாகிஸ்தான் அரசு தனது இயக்கம் மீது தீவிர நடவடிக்கையை எடுத் துள்ளது. சட்டத்தின் பெயரில் சட்டவிரோதமாக எடுக்கப் பட்ட இந்த நடவடிக்கையை எதிர்த்து முறையீடு செய்யப் போகின்றேன் என்று தெரி வித்துள்ளார்.

# தாய்ப்பால் கொடுத்த முதல் திருநங்கை

## அமெரிக்கா சாதனை

அமெரிக்காவில் சத்திர சிகிச்சை எதுவுமின்றி குழந் தைக்குத் தாய்ப்பால் கொடுத்து திருநங்கை ஒருவர் சாதனை படைத்துள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்த திருநங்கை ஒருவர் வாடகைத் தாய் மூலம் பெண் குழந்தை பெற்றார். ஆனால் அக்குழந் தைக்கு வாடகைத் தாய் தாய்ப்பால் கொடுக்க மறுத்து விட்டார்.

அதற்காக திருநங்கைக்கு சத்திர சிகிச்சை எதுவும் செய்ய வில்லை. மவுன்ட் சினாய் பார்டிரான்ஸ் ஜெண்டர்வைத் தியசாலையில் ஓமோனை மாற்றக்கூடிய மருத்துவ முறைகள் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டது.

குழந்தை பிறப்பதற்கு 5 மாதங்களுக்கு முன்பே இம்மருத்துவ முறை மூலம் பால் சுரக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. தற்போது இவர் ஒரு நாளுக்கு 8



அவுன்ஸ் தாய்ப்பால் உற் பத்தி செய்து குழந்தைக் குப் புகட்டி வருகிறார்.

இதன் மூலம் இவர் இன் னும் 6 மாதங்களுக்குப் பால் கொடுக்க முடியும். அதன் பின் சரியான உணவு முறை கள் மூலம் மேலும் கொடுக்க வழிவகை செய்யலாம் என வைத்தியர்கள் கூறியுள்ளனர்.

குழந்தைக்குத் தாய்ப்பால் தரும் திருநங்கையின் பெயர் வெளியிடப்படவில்லை. அவருக்கு 35 வயது ஆகி றது. உலகிலேயே தாய்ப் பால் கொடுத்த முதல் திரு நங்கை என்ற பெருமையை இவர் பெற்றுள்ளார்.

# பாலியல் உறவு கொள்ள அமைச்சர்களுக்குத் தடை

## ஆஸி. பிரதமர் அறிவிப்பு

கான்பெரா, பெப்.17

ஆஸ்திரேலியாவில் அமைச்சர்கள் திருமணம் ஆனவராக இருந்தாலும், ஆகாதவராக இருந்தாலும், தங்களது பெண் ஊழியர் களுடன் பாலியல் உறவு வைத்துக்கொள்ளக்கூடாது என்று பிரதமர் மால்கம் டர்ன்புல் அறிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியத் துணைப்



பிரதமர் பர்னபி ஜாய்ஸ், தன் னிடம் பத்திரிகை ஆலோ சகராக பணியாற்றிய விக்கி கேம்பியன் என்ற பெண் ணுடன் 'செக்ஸ்' தொடர்பு வைத்திருந்த சம்பவம், சமீ பத்தில் வெளியாகி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள் ளது. அவர் பதவி விலக வேண்டும் என்று எதிர்க் கட்சிகள் வற்புறுத்தி வரு கின்றன.

இந்த நிலையில், ஆஸ்தி ரேலிய பிரதமர் வெளி யிட்டுள்ள அறிக்கையில், 'அமைச்சர்களுக்கு அந்த ரங்க உரிமை இருந்தபோதி லும், அவர்கள் கண்ணிய மாக நடக்க வேண்டும் என்று பொதுமக்கள் எதிர் பார்க்கிறார்கள்.

அவர்கள் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக நடந்து கொள்ள வேண்டும். ஆகவேதான், அவர்களுக் கான நடத்தை விதிமுறை களில் இந்தத் தடையை சேர்த்துள்ளேன் என்று தெரி வித்துள்ளார். (ப)

காலைக்கதிர்
Kalaikkathir



# புதிய கட்சிக்கு 3 பெயர்கள் – நீதிமன்றில் தினகரன் தரப்பு பரிந்துரை



புதுடில்லி,பெப்.17

உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிட முடிவு செய்துள்ள டி.டி.வி தினகரன், அம்மா திராவிட முன்னேற்ற கழகம் உள்ளிட்ட 3 பெயர்களை டில்லி உயர் நீதிமன்றில் பரிந்துரை செய்துள்ளார்.

ஆர்.கே.நகரில் வெற்றி பெற்ற குக்கர் சின்னத்தை தனது அணிக்கு வழங்க வேண்டும் என டில்லி உயர் நீதிமன்றில் சட்டமன்ற உறுப்பினர் டி.டி.வி தினகரன் மனுதாக்கல் செய்திருந்தார். ஆனால், தனி நபருக்கு அந்தச் சின்னம் அளிக்கலாம் என்றும் ஒரே அணியாக உள்ளவர்களுக்கு அளிக்க முடியாது என நீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் கூறியிருந்தது.

மேலும், உள்ளாட்சித் தேர்தலில் சின்னம் ஒதுக்குவது மாநில தேர்தல் ஆணையத்தின் முடிவே எனத் தெரிவிக்கப்பட்டது. இதனால், புதுக் கட்சி தொடங்கி அக் கட்சிக்கு குக்கர் சின்னத்தைப் பெறும் முயற்சியில் இறங்கியுள்ளார். இந்த நிலையில், அனைத்திந்திய அம்மா திராவிட முன்னேற்ற கழகம், எம்.ஜி.ஆர் அம்மா முன்னேற்ற கழகம் மற்றும் அம்மா எம்.ஜி.ஆர் முன்னேற்ற கழகம் ஆகிய மூன்று நேற்று உயர் நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளது.

எனினும், புதிய கட்சியை உடனே பதிவு செய்வது சாத்தியமில்லை. இதனால் தேர்தல் ஆணையம் இடைக்கால ஏற்பாடு செய்ய வேண்டும் எனத் தினகரன் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## பாதுகாப்புக்கு அதிக செலவு; 5 ஆவது இடத்தில் இந்தியா

அமெரிக்காவுக்கு அடுத்து சீனா



லண்டன்,பெப்.17

உலகில் பாதுகாப்புக்காக செலவு செய்யும் நாடுகளில் 5 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது இந்தியா.

இந்தத் தகவல் இராணுவ இருப்பு 2018 மூலோபாய ஆய்வுகள் சர்வதேச நிறுவனம் (IISS) அறிக்கையில் தெரியவந்து உள்ளது. லண்டனைத் தளமாகக் கொண்ட சர்வதேச நிறுவனத்தின் மூலோபாய ஆய்வுகளின்படி 2017 ஆம் ஆண்டு 52.5 பில்லியன் டொலர்களைப் பாதுகாப்புக்கு ஒதுக்கி இந்தியா இங்கிலாந்தை முந்தியுள்ளது.

அதில் ,இங்கிலாந்து 2016 ஆம் ஆண்டு 52.5 பில்லியன் அமெரிக்க டொலர்களும், 2017 ஆம் ஆண்டு 50.7 பில்லியன் டொலர்களும் ஒதுக்கி உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்கும் இடையில் உள்ள இராணுவ சமநிலையில் ஒரு முக்கிய மாற்றத்தைப் பிரதிபலிக்கிறது. உலகளாவிய சூழலில் இங்கிலாந்தை விட பிராந்திய ஆதாரங்களை வளர்ப்பதற்கான இந்தியாவின் அதிக திறன்களை ஒதுக்கீடு செய்துள்ளது எனத் தெற்கு ஆசியாவிற்கான IISS மூத்த அதிகாரி ராகுல் ராய் சவுத்திரி கூறி உள்ளார்.

அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக உலகின் இரண்டாவது பெரிய பாதுகாப்பு வரவு செலவுத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு இந்தியாவை விட 3 மடங்காக 150. 5 மில்லியன் டொலர் நிதியை ஒதுக்கீடு செய்து உள்ளது சீனா.

# காவிரி நதிநீர்ப் பிரச்சினைக்கு நீதிமன்று நேற்று அதிரடித் தீர்ப்பு!

தமிழகத்தின் மிக முக்கிய பிரச்சினையாகப் பார்க்கப்படும் காவிரி வழக்கில் நேற்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

காவிரி நதிநீர் பிரச்சினை நூற்றாண்டுகளாக நீடித்து வரும் நிலையில், கடந்த 2007ஆம் ஆண்டு நடுவர் மன்றம், 192 டி.எம்.சி. நீரை தமிழகத்துக்கு கர்நாடகா திறந்து விட வேண்டும் என உத்தரவிட்டது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து கூடுதல் நீர் கோரி தமிழகம், கர்நாடகா, புதுவை, கேரளா மாநிலங்கள் உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தன.

கடந்த 10 ஆண்டுகளாக நடைபெற்ற வழக்கின் விசாரணை நிறைவடைந்ததைத் தொடர்ந்து நேற்றுத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா தலைமையிலான அமர்வு வழங்கிய



தமிழகத்துக்கு 177.25 டி.எம்.சி. தண்ணீர்

தீர்ப்பில், காவிரி நீரை உரிமை கொண்டாட எந்த மாநிலத்துக்கும் உரிமை யில்லை, காவிரியிலிருந்து தமிழகத்திற்கு 177.25 டி.எம்.சி. நீரை ஒதுக்கீடு செய்ய உத்தரவிட்டுள்ளார். காவிரி நீரில் தமிழகம் 264 டி.எம்.சி. தண்ணீர் வேண்டும் எனக் கேட்டது ,ஆனால் நடுவர் மன்றம் தமிழகத்திற்கு 192 டி.எம்.சி ஒதுக்கியிருந்தது.

இந்த நிலையில் 14 டி.எம்.சி குறைத்து தமிழகத்திற்கு ஆண்டுதோறும் 177.25 டி.எம்.சி தண்ணீரை தடையின்றி வழங்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளது. மேலும் கர்நாடகாவுக்கு 14 டி.எம்.சி அதிகரித்து 184.75 டி.எம்சி நீர் என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கேரளா மற்றும் புதுச்சேரி மாநிலங்களுக்கான ஒதுக்கீட்டில் மாற்றமில்லை.

காவிரி நீரைச் சொந்தம் கொண்டாட எந்த மாநிலத்துக்கும் உரிமை இல்லை, காவிரி நதி தேசத்தின் பொதுச் சொத்து என உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. காவிரி தங்களுக்கே சொந்தம் எனக் கர்நாடகா தொடர்ந்து கூறிவந்த நிலையில் நீதிபதிகள் அதிரடித் தீர்ப்பு வழங்கியுள்ளனர். (ப)

## விஜய் மல்லையா வெளிநாடு தப்பிச் செல்ல பா.ஜ.க. உடந்தை



கெஜ்ரிவால் குற்றச்சாட்டு

புதுடில்லி,பெப்.17

விஜய் மல்லையா வெளிநாடு தப்பிச் செல்ல பா.ஜ.கவே உடந்தையாக இருந்தது என புதுடில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் தெரிவித்துள்ளார்.

டில்லியைச் சேர்ந்த வைர வியாபாரி நீரவ் மோடி. கோடீஸ்வரரான இவர் டையமண்ட் ஆர் யூ.எஸ். என்ற தனது நிறுவனத் தேவைக்காகப் பஞ்சாப் தேசிய வங்கியில் இருந்து மோசடி செய்து 280.70 கோடி ரூபா அளவிற்குப் பணம் பெற்றுள்ளார்.

இந்த நிலையில், நிரவ் மோடி வெளிநாட்டிற்கு தப்பிச் சென்று விட்டார் என மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக டில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் டுவிட்டரில் கூறியதாவது:-

வைர வியாபாரி நீரவ் மோடியும், பிரபல தொழிலதிபர் விஜய் மல்லையாவும் பா.ஜ.க. அரசு ஆதரவு இல்லாமல் வெளிநாட்டிற்கு தப்பிச் சென்று இருக்க முடியுமா? இதனை நம்ப முடிகிறதா? எனக் கேள்வி எழுப்பியுள்ளார். (ப)

# காஷ்மீரில் ராணுவ முகாம் மீது தீவிரவாதிகள் மீண்டும் தாக்கு!



ஜம்மு,பெப்.17

ஜம்மு - காஷ்மீரின் புல்வாமா மாவட்டத்தில் உள்ள சி.ஆர்.பி.எப். முகாம் நேற்று இரவு தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளமையால் அப் பகுதியில் பதற்றமான சூழல் நிலவி வருகிறது.

காஷ்மீரில் கடந்த சில தினங்களாக பாகிஸ்தான் ஆதரவு தீவிரவாதிகளின் தாக்குதல்கள் அதிகரித்தபடி உள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜம்மு அருகே சன்ஜவான் ராணுவ முகாமுக்குள் புகுந்து தாக்குதலில் ஈடுபட்ட 4 பாகிஸ்தான் தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்த நிலையில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் சுமார் 400 பேர், ஊடுருவல் செய்வதற்கு தயார் நிலை யில் இருக்கின்றனர் என அமெரிக்க உளவுத்துறை எச்சரித்துள்ளது. இந்தியா முழுவதும் நாசவேலை செய்வதற்கு அவர்கள் திட்டமிட்டுள்ளனர் எனவும் உளவுத்துறை இந்தியாவை உஷார்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு சுமார் 8 மணியளவில் மீண்டும் அவந்திபோரா சி.ஆர்.பி.எப். முகாம் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில் 6 பாகிஸ்தான் தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## ஆட்சிக்கு வரக்கூடாது என்ற சதியை தி.மு.க. முறியடித்து வெற்றி பெறும்

சென்னை,பெப்.17

தமிழகத்தில் தி.மு.க. ஆட்சிக்கு வரக்கூடாது என்ற சதியை முறியடித்து வெற்றி பெறும் என்று கனிமொழி எம்.பி. தெரிவித்துள்ளார்.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் கனிமொழி எம்.பி. நிருபர்களிடம் கூறியவை வருமாறு:-

தி.மு.க. சார்பில் டி.ஆர்.பாலு தலைமையில் குழு அமைக்கப்பட்டு போக்குவரத்துத் துறையில் உள்ள குறைபாடுகளை எப்படிக் களைய வேண்டும், துறையை எப்படிச் சீர்செய்ய வேண்டும் என்ற ஆய்வறிக்கை வழங்கப்பட்டுள்ளது. அதனை முதலமைச்சரை நேரில் சந்தித்து மு.க.ஸ்டாலின் வழங்கியுள்ளார்.

நல்ல அரசாங்கமாக இருந்தால் யார் நல்ல விடயத்தைச் சொன்னாலும் அதில் இருக்கக்கூடிய நல்லதை எடுத்துக்கொண்டு மக்களுக்கு கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும். இந்த அரசாங்கம் அதைச் செய்யுமா? என்று தெரியவில்லை. மக்களைப்



கனிமொழி எம்.பி.

பற்றிக் கவலைப்படும் அரசாங்கமாக இருந்தால் அதில் இருக்கக்கூடிய விடயங்களைச் செயற்படுத்தினால் நிச்சயமாகத் துறையைக் காப்பாற்ற முடியும்.

மக்கள் மீது அதிக கட்டணம் என்ற சுமையை ஏற்றாமல் இருக்க முடியும். தி.மு.க. ஆட்சிக்கு வரக்கூடாது என்று எத்தனையோ ஆண்டுகளாக சில சக்திகள் ஒன்றிணைந்து எதிர்த்துக் கொண்டுதான் இருக்கின்றன. இதை தி.மு.க. முறியடித்து வெற்றி பெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. அந்த வெற்றி இனியும் தொடரும் என்று தெரிவித்துள்ளார்.



# ரி-20 தொடர் தோல்விகளுக்கு இலங்கை அணி முற்றுப்புள்ளி



இலங்கை மற்றும் பங்களா தேஷ் அணிகளுக்கு இடை யில் நிறைவடைந்திருக்கும், ரி-20 தொடரின் முதல் போட்டி யில் பங்களாதேஷ் அணியை இலங்கை 6 விக்கெட்டுக்களால் வீழ்த்தியிருப்பதுடன் இரண்டு போட்டிகள் கொண்ட தொடரிலும் 1:0 என முன்னிலை அடைந்தி ருக்கின்றது.

டாக்காவில் நேற்று முன்தி னம் இடம்பெற்ற போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணியின் தலைவர் மஹ்மதுல்லா முத லில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்திருந்தார்.

இப்போட்டிக்காக பங்களா தேஷ் அணி நான்கு அறிமுக வீரர்களை களமிறக்கியிருந்த தோடு மறுமுனையில் இலங்கை அணியும் ஷெஹான் மதுங்க வுக்கு ரி-20 போட்டியொன்றில் முதல் தடவையாக விளையாடும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியி ருந்தது. இத்தோடு நான்கு வரு டங்களின் பின்னர் ரி-20 போட் டிகளுக்காக சகலதுறை வீரரான ஜீவன் மெண்டிஸும் இலங்கை அணிக்குத் திரும்பியிருந்தார்.

போட்டியின் முதல் துடுப்பாட் டத்தை தொடங்கிய பங்களாதேஷ் அணி அணித் தலைவர் மஹ் மதுல்லா, விக்கெட் காப்பாளர் முஸ்பிகுர் ரஹீம் ஆகியோர் துரிதகதியிலான துடுப்பாட்டத் தின் மூலம் பங்களிப்பு வழங்க 20 ஓவர்கள் முடிவில் பங்களா தேஷ் அணி 5 விக்கெட்டுகளை இழந்து 193 ஓட்டங்களைப் பெற் றுக் கொண்டது.

இலங்கை அணியின் பந்து வீச்சு சார்பாக ஜீவன் மெண்டிஸ் 21 ஓட்டங்களுக்கு 2 விக்கெட் டுக்களையும், தனுஷ்க குணத்தி லக, இசுரு உதான, திசர பெரேரா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டு வீதமும் கைப்பற்றினர்.

இதனையடுத்து, 194 ஓட்டங் கள் என்ற கடினமான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பாடிய இலங்கை அணிக்கு ஆரம்ப வீரர்களில் ஒருவரான தனுஷ்க குணத்திலக்க, குசல் மெடிஸ் விஸ்வரூபம் எடுக்க இலங்கை அணி விரைவாக இலக்கை நோக்கி முன்னேறி யது. குஷல் மெண்டிஸ் 53 ஓட்டங்க ளுடன் ஆட்டமிழக்க, அடுத்துக் குறுகிய நேர இடைவெளிக்குள் நிரோன் தி க்வெல்லஉப்புல்தரங்க ஆகியோரின் விக்கெட்டுக் களை இலங்கை அணி பறி கொடுத்திருந்தது.

இதனால், ஒரு தடுமாற்றம் உணரப்பட்ட போதிலும் மத்தி யவரிசை வீரர்களாக வந்த தசுன் சாணக்க, திசர பெரேரா அழுத் தங்கள் எதனையும் உணராதவர் கள் போன்று பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சாளர்களை சிதறடித்திருந்தனர்.

இதனால், சவால் கூடிய வெற்றி இலக்கை 16.4 ஓவர் களில் 194 ஓட்டங்களுடன் வெறும் 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து இலங்கை அடைந்தது.

இந்த வெற்றியின் மூலம் இலங்கை அணி, இறுதியாக தாம் விளையாடிய எட்டு ரி-20 போட்டிகளிலும் பெற்ற தோல் விகளுக்கு முற்றுப் புள்ளி வைத் திருக்கின்றது. இத்தோடு, இப் போட்டியில் எட்டப்பட்ட 194 ஓட் டங்கள் இலங்கை அணி ரி-20 போட்டியொன்றில் தாண்டிய அதி கூடிய வெற்றி இலக்கு என்பதும் குறிப்பிடத்தக்கது.

போட்டியின் ஆட்ட நாயகன் விருதை குஷல் மெண்டிஸ் பெற்றுக் கொண்டார். இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவதும் இறுதியுமான ரி-20 போட்டி நாளை சில்லெட் டில் நடைபெறவுள்ளது.

# ஓய்வுக்கு தயாராகும் யுவராஜ்

சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து விடைபெற விரும்புகிறேன் என இந் திய வீரர் யுவராஜ்சிங் கூறியுள்ளார்.

எனது மிகச்சிறந்த கிரிக்கெட் ஆட்டத்தை வெளிப்படுத்தி முடித்து விட்டேன். இனிச் சாதிப்பதற்கு ஒன்றும் இல்லை என்று எனது உள்மனது உணரும் போது ஓய்வு முடிவை அறி விப்பேன் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் வருங்காலத்தில் தனது அறக்கட்டளையின் மூலம் புற்றுநோய் விழிப்புணர்வுப் பிரசாரம் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவ தில் கவனம் செலுத்துவதுடன் பயிற் சியாளராக செயற்படும் எண்ணமும் உள்ளது எனத் தெரிவித்துள்ளார்.



36 வயதாகும் யுவராஜ் அண் மைக்காலமாக இந்திய தேசிய அணி யில் இணைக்கப்படவில்லை என்ப தும் குறிப்பிடத்தக்கது.

# அஸ்வின் அவுட்?

2019ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ணப் போட்டிக்கான இந்திய அணியில் ரவிச்சந்திரன் அஸ்வின் இடம்பெறுவது சந்தேகம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய இந்திய அணியில் சுழற்பந்து வீச்சாளர்களான சாஹல், குல்தீப் உள்ளனர், இருவரின் ஆட்டம் சிறப்பாக உள்ளமையால் ஒருநாள் அணியில் நீடித்திருப்பார்கள் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் அஸ்வின் மற்றும் ஜடேஜா ஆகியோருக்கு அணியில் இடம்கிடைப்பது கேள்விக்குறியாகியுள்ளது. மேலும், இதற்கு பின்னணியில் விராட் கோஹ்லி உள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனை உறுதி செய்யும் வகை யில் பி.சி.சி.ஐ. நிர்வாகம், அஸ்வின் மற்றும் ஜடேஜாவின் இடத்தை சாஹல், குல்தீப் நிரப்புவார்கள் என்று தெரிவித்துள்ளது.

இந்திய அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளர் பாரத் அருண் கூறுகை யில், இவர்கள் அணியில் இருப்பார் களா என்று உறுதியாகச் சொல்ல முடியாது, ஆனால் இவர்கள் அதற் கான பந்தயத்தில் கண்டிப்பாக இருக்கிறார்கள் என்று தெரிவித்துள் ளார்.






# இலங்கை கிரிக்கெட் வளர்ச்சி திட்டம் வகுத்த கிரிக்கெட்சபை

இலங்கை கிரிக்கெட் அணியின் எதிர்கால வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் 104 உள்ளூர் வீரர்க ளுக்கான ஒப்பந்தத்தை வழங்கியுள்ளது.

இந்த ஒப்பந்தத்தை வழங்கிவைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மதியம் ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவன கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

2017/2018 ஆம் ஆண்டு பருவ காலத் தைக் கருத்தில்கொண்டு இவர்களது செயற் பாடுகளுக்காக 85 மில் லியன் ரூபா செலவு செய்யப்படவுள்ளது எனவும் அறிவிக்கப்பட் டுள்ளது.

தேசிய அணிக்காகக் கடந்த காலங்களில் விளையாடிய 30 வயதைக் கடந்த இப்போதும் உள்ளூர் போட்டியில் விளையாடிவரும் 15 சிரேஷ்ட வீரர்களும், அண்மைக்காலம் இலங்கைத் தேசிய அணியில் இடம்பெற் றிருந்தும் தேசிய வீரர்களுக்கான இறுதி ஒப்பந்தத்தில் சேர்த்துக்கொள்ளப்படாத17 வீரர்களும், வளர்ந்துவரும் வீரர்கள் எனும் அடிப்படையில் 23 வீரர்களும், முதல்தரப் போட்டிகளில் திறமைகளை வெளிப்படுத் திய 20 வீரர்களும், 19 வயதுக்குட்பட்ட 29 வீரர்களும் இதிலே உள்ளடங்குகின்றனர்.



# காதலில் விழுந்த ஹார்திக் பண்டையா

இந்திய கிரிக்கெட் அணியின் வளர்ந்து வரும் வீரரான ஹார்திக் பண்டையா எல்லி அர்ராம் என்ற நடிகையை காதலித்து வருகின்றார் எனத் தகவல்கள் வெளியாகி யுள்ளன.

தற்போது உள்ள இந்திய அணியில் நீக்க முடியாத வீரராக பண்டையா உள்ளார், இவருக்கு என்றே ஒரு தனி ரசிகர் பட்டாளமே உருவாகிவிட்டது.

இந்த நிலையில் போஸ்டர் பாய்ஸ், நாம் சபானா போன்ற படங்களில் நடித்துள்ள எல்லி அர்ராமை பண்டையா காதலிக்கின் றார் எனக் கூறப்பட்டது. ஆனால் இதுகுறித்த கேள்விக்கு இருவரும் அதெல்லாம் இல்லை என்று மறுத்தனர்.

இதைத் தொடர்ந்து சமீபத்தில் தன்னுடைய மூத்த சகோதரான கருணால் பாண்டியா திருமணம் நடந்தது, அதில் ஹார்திக் எல்லி யுடன் ஜோடியாக கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உலகத் தகவல் தொழில்நுட்ப காங்கிரஸின் 22ஆவது மாநாடு நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பங்கேற்க விருந்தார்.

எனினும்நாட்டில்ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பநிலை காரண மாக தனது இந்தியப் பயணத்தை ரணில் கைவிட்டார் என்று அறி விக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நானேதான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டு அரசில் அங்கம் வகிக்கும் இரு தேசியக் கட்சிகளும் படு தோல்வி கண்டுள்ள நிலையில், மத்தியில் ஆட்சியைப் பிடிக்க ஐ.தே.கவும் சு.கவும் தனித்தனியே நடவடிக்கைகளில் இறங்கியுள் ளன. இதனால் கொழும்பு அரசி யல் சில தினங்களாக பரபரப் புடன் உள்ளது. இவ்வாறான தொரு நிலையிலேயே பிரதமர் நேற்று இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

அலரிமாளிகையில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவிய லாளர் சந்திப்பில் பங்கேற்ற அவர் ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விகள் அனைத் துக்கும் சிரித்துக் கொண்டே பதி லளித்தார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நெருக்கடி பற்றிக் கேட்கப்பட்டபோது, இரண்டு பிரதான கட்சிகள் இணைந்து நடத்தும் ஆட்சி என்னும்போது இவ்வாறான பிரச்சினைகள் தோன்றுவது இயல்பே என்று கூறிய அவர், இதுபோன்ற பிரச்சினைகள் எழாவிட்டால் ஊடகங்களுக்குச் சுவாரிஷ்யம் இல்லாமல் போய்விடுமே என்று குறிப்பிட்டார்.

ஆட்சி மாற்றம் தொடர்பா கக் கேட்கப்பட்ட கேள்விக்கு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தமது நிலைப்பாட்டை ஜனாதிபதிக்கும், ஐக்கிய தேசியக் கட்சி தனது நிலைப்பாட்டைப் பிரதமருக்கும் தெளிவாக எடுத்தியம்பியிருப் பதாகவும் எனினும் கூட்டாட்சிக்கு பங்கம் வரும் வகையில் எவ்வித மான ஆலோசனைகளோ, முடிவுகளோ எடுக்கப்படவில்லை என்றும் கூறினார்.

மஹிந்தவைக் காப்பாற்றும் முயற்சியில் இறங்கினீர்களா என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, மஹிந்த குடும்பத்தினர் மீது நானூறுக்கும் மேற்பட்ட வழக்கு களைப் பதிந்திருப்பதாகவும் இதன் அடிப்படையில் தாம் மஹிந் தவைக் காப்பாற்றியதாகக் கூறப்படுவது அபத்தமானது என்றும் பதிலளித்தார்.

பிணைமுறி விவகாரம் அண் மைய தேர்தல் தோல்விக்குக் காரணமாக இருந்திருக்குமா? என்று கேட்கப்பட்டதற்கு, அந்த விவகாரத்தில் மக்கள் உடனடித் தீர்ப்பை எதிர்பார்ப்பதாகவும், ஆயினும் சட்ட நடவடிக்கை களுக்கு சிறிது கால அவகாசம் தேவைப்படுவதாகவும், எதிர் காலத்தில் அந்த வழக்கை விரைந்து முடிக்கப் பரிந்துரை கள் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். எவ்வாறெனினும் அந்த விவகாரத்தின் தாக்கம் தேர்தல் முடிவுகளைப் பாதித்திருக் கலாம் என்றும் அவர் கூறினார்.

பிரதமர் மீது நம்பிக்கையில் லாத் தீர்மானம் கொண்டுவரப் படுமா? அதை நீங்கள் எதிர் கொள்ளத் தயாரா? என்று கேட்கப்பட்டபோது, அப்படியொரு சந்தர்ப்பம் ஏற்பட்டால் தமக் கான ஆதரவை மன்றில் காட்ட முடியும் – என்றார்.

அமைச்சரவையில் எவ்வா றான மாற்றங்கள் கொண்டு வரப்படவிருக்கின்றன என்று அவரிடம் கேட்டதற்கு, இன்னும் அது தொடர்பான ஆலோ சனைகளே முன்வைக்கப்பட்டு வருவதாகவும் முடிவுகள் தொடர் பில் போகப் போகத் தெரியும் என்றும் கூறினார். (ஐ)

## எதிரணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வழங்கத் தீர்மானித்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சட்டத்தரணிகள் சத்தியப் பிர மாணம் செய்து கொள்ளும் நிகழ் வில் கலந்து கொள்வதற்காக நேற்று உயர்நீதிமன்ற வளா கத்துக்குச் சென்றிருந்தபோது, அங்கிருந்த ஊடகவியலாளர் களிடம் அவர் இதனைக் கூறி யுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரி விக்கையில்,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணியின் அரசு அமைந்தால், அதில் யார் பிரதமர், அமைச்சர் கள் யார் என்பது எனக்குத் தெரி யாது, பிரதமரையும் அமைச்சர் களையும் நியமிக்க வேண்டியது அவர்களின் வேலை.

அவற்றில் நாங்கள் தலை யிட மாட்டோம். மக்கள் தற்போது மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். நாடு தற்போதுள்ள நிலைமை யைக் கவனத்தில் கொண்டே நாங்கள் இந்தத் தீர்மானத்தை எடுத்தோம் – என்றார்.

அதேவேளை, இந்தச் சந் தர்ப்பத்தில் முன்னாள் பாதுகாப் புச் செயலாளர் கோட்டாபய ராஜ பக்ஷவும் கலந்து கொண்டுள் ளார். அமெரிக்கக் குடியுரி மையை இரத்துச் செய்துவிட்டு, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயாரா என கோட்டாபயவிடம் ஊடகவியலா ளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த கோட் டாபய, நான் அமெரிக்கப் பிரஜை. தற்போது நாடு அடைந்துள்ள நிலைமையை அனைவரும் அறிவார்கள். இதனால், துரித மாக பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் – என்றார். (ஐ)

## ரணிலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சட்டத்தின் 46 ஆவது சரத்தின் பிரகாரம் பிரதமரைப் பதவி நீக்கு வதற்குரிய அதிகாரம் ஜனாதி பதிக்கு இல்லை.

46ஆவது சரத்தில் பிரதம அமைச்சர் ஜனாதிபதிக்கு முக வரியிட்டு அனுப்பும் தம் கைப் பட்ட கடிதத்தின் மூலம் அவரது பதவியைத் துறந்தொழிய அல்லது நாடாளுமன்ற உறுப் பினரொருவராக இல்லாதொழிந் தாலொழிய அரசமைப்பின் ஏற்பாடுகளின்கீழ் அமைச் சரவை தொடர்ந்தும் பணியாற் றும் காலம் முழுவதும் அவர் பதவியில் இருக்கவேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில்தான் உயர் நீதிமன்றத்திடமும் விளக்கம் கோரப்படவுள்ளது.

இதற்கிடையில் சட்டமா அதி பருக்கும், ஜனாதிபதிக்கும் இடை யிலான விசேட சந்திப்பு நேற்று நடைபெற்றது. (ஐ)

## நல்லாட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மன்ற உறுப்பினர் ரஞ்சன் ராம நாயக்க ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

ஜனாதிபதியின் இல்லத்தில் நேற்றுக் காலை இந்த அவசர சந்திப்பு இடம்பெற்றது.

சந்திப்பையடுத்து ஊடகங் களுக்குக் கருத்து வெளியிட்ட அவர்,

2015ஆம் ஆண்டு ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன மற் றும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான நல் லாட்சி அரசை ஐந்து வருடங் களுக்குக் கொண்டுசெல்லவே மக்கள் ஆணை வழங்கியிருந் தனர். இடையில் இவ்வாறு முறித் துக் கொள்வதற்கல்ல.

தற்போது ஏற்பட்டுள்ள முறு கலுக்கு இரு தரப்பிலும் சுமூக மான தீர்வு கண்டு நல்லாட்சி அரசைத் தொடர்ந்து முன் னெடுத்துச் செல்ல வேண்டு மென்று ஜனாதிபதியிடம் வலி யுறுத்தியுள்ளேன் – என்றார். (ஐ)

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பாதுகாப்புச் சபைக்கு மாற்ற வேண்டும் என வலியுறுத்தி யுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, அதனை மக்கள் மத்தியில் கையெழுத்துப் போராட் டமாகக் கொண்டு செல்லவுள்ள தாக அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங் கைக்கு வழங்கப்பட்டுள்ள இரண்டு வருடகால அவசாகம் ஒரு வருடத்தை நிறைவு செய் துள்ள நிலையில், இலங்கை பொறுப்புக்கூறல் தொடர்பில் எதுவிதமான ஆரம்ப நடவடிக் கைகளைக்கூட மேற்கொள்ள வில்லை எனவும் அந்தக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமையகத்தில் நேற்றுப் பிற்பகல் செய்தியாளர்கள் சந் திப்பு இடம்பெற்றது. அதில் கட்சி யின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தவை வருமாறு:

ஜெனிவா ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் வரும் மார்ச் மாதம் ஆரம்பமாகவுள்ளது. அங்கு இலங்கையின் இணை அனு சரணையுடன் நிறைவேற்றப் பட்ட தீர்மானத்தின் பரந்துரை களை நடைமுறைப்படுத்தப்பட்ட கொழும்புக்கு இரண்டு வருட கால அவசாகம் கடந்த ஆண்டு கூட்டத்தொடரின்போது வழங்கப் பட்டது.

அந்தக் கால அவகாசம் வழங்கப்பட்டு ஒரு வருடம் நிறை வடைந்துள்ளது. இலங்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமை கள் அலுவலகம் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கவுள்ளது. நாம் ஏற்கனவே இலங்கைக்கு காலஅவகாசம் வழங்கப்படக் கூடாது என வலியுறுத்தி வந்தி ருந்தோம்.

இலங்கை ஜனாதிபதியும் சரி, பிரதமர், வெளிவிவகார அமைச் சர் உள்ளிட்ட அனைத்துத் தரப் பினரும் சரி, தாங்கள் 30.1 அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வற்றை நிறைவேற்றப்போவ தில்லை என தெளிவாகக் கூறிய நிலையிலேயே அவர்களுக்கு இரண்டு வருட கால அவகாசம் வழங்கப்பட்டது.

இலங்கை அரசு பொறுப்புக் கூறும் வகையில் கலப்பு நீதிமன் றம் ஒன்றை நிறுவுவதனைக் கூட ஏற்றுக்கொள்ளாத நிலை யில்தான் இரண்டு வருட கால அவசாகம் வழங்கப்பட்டது. இன்று ஒரு வருடம் கடந்த நிலை யிலும் தீர்மானம் நிறைவேற் றப்பட்ட காலத்தில் செயற்பட் டதுபோலவே பொறுப்புக்கூற லில் எதுவித முன்னேற்றகர மான நடவடிக்கையும் இன்றியே இலங்கை அரசு இருக்கின்றது.

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் உருவாக்கப்பட்ட போதும் அதனைது செயற்பாடின் மையால் மக்கள் அதனை நிராகரித்திருக்கின்ற நிலையில் ஒரு விதமான முன்னேற்றமும் இல்லை என்ற யதார்த்தநிலை தான் காணப்படுகின்றது.

இவ்வாறான ஒரு நிலையில் இலங்கை அரசுக்கு இரண்டு வருட கால அவகாசம் வழங்கக் கூடாது என வலியுறுத்தியிருந் தோம். இதில் பாதிக்கப்பட்ட மக் களது கருத்தும் மிகத் தெளிவாக உள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகின்றோம். காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவினர் களும் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் எனப் போராடுகின்ற மக்களும் கடந்த ஒரு வருடமாக தெருக்களிலேயே இருக்கின் றனர்.

எனவேதான் நாங்கள் மேல திக கால அவகாசத்தை இடை நிறுத்தி இலங்கை விவகாரத்தை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக்கு மாற்றவேண் டும் என வலியுறுத்துகின்றோம். பாதுகாப்புச் சபை ஊடாகச்

பக்கம் 03

## திருடர்களுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கட்டுநாயக்கவில் அமைந்துள்ள விஜயகுமாரதுங்கவின் நினை வுத் தூபிக்கு அஞ்சலி செலுத்தி விட்டு ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கை யிலேயே சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க மேற்கண் டவாறு கூறினார்.

சந்திரிகாவிடம் ஊடகவிய லாளர்கள் உங்களது பேரனார் அரசியலில் ஈடுபடுவாரா எனக் கேட்டனர். அதற்கு அவர்,

அப்பா, அம்மா, சித்தி, சித் தப்பா என அரசியலுக்குள் நுழைய வேண்டிய அவசிய மில்லை. மக்கள் எவ்வாறு ஆணை வழங்கியுள்ளனரோ அதேபோன்று நாட்டில் ஆட்சி நிலவும்.

தற்போதைய அரசு திருடர் களைப் பிடிக்காததால் அரசுக்கு மக்கள் பாடம் புகட்டியுள்ளனர். இதேவேளை, தற்போதைய அரசு மீண்டும் திருடர்களுடன் சேர்ந்து ஆட்சியமைத்தால் மக் கள் மீண்டும் பாடம் புகட்டுவர். வாழ்க்கை என்பது அரசியல் மாத்திரமில்லை – என்றார். (ஐ)

## சு.க.ஆட்சிக்கு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
துடிக்கின்றன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனித்து ஆட்சியமைத்தால் நிபந்தனை யற்ற முழுமையான ஆதரவை வழங்கக் கூட்டு எதிரணி தயா ராகவுள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இல்லத்தில் நேற்று ஜனாதிபதி மைத்திரியைச் சந்தி த்த கூட்டு எதிரணியினர் இந்த விவகாரம் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடினர். இந்தக் கலந் துரையாடலையடுத்தே சு.கவின் அரசை அமைக்க நிபந்தனை களுடன் கூடிய ஆதரவை வழங் கத் தாம் தயாராகவுள்ளதாகக் கூட்டு எதிரணியின் தலைவர்கள் ஊடகங்களுக்கு அறிவித்தனர்.

நேற்றுக் காலை நடைபெற்ற இந்தச் சந்திப்பில் கூட்டு எதிரணி யின் தலைவர் தினேஸ் குணவர் தன, தேசிய சுதந்திர முன்னணி யின் தலைவர் விமல் வீரவன்ஸ, பிவிதுரு ஹெல உருமயவின் தலைவர் உதய கம்மன்பில, நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.பி.ரத்நாயக்க, டலஸ் அழக பெரும உட்பட பலர் கலந்து கொண்டனர்.

அங்கு கருத்து வெளியிட்ட விமல் வீரவன்ஸ,

ஐ.தே.கவையும் அதன் பிரத மரையும் நீக்க சு.க. தலைமை யில் அமைக்கப்படும் அரசுக்கு நிபந்தனைகளுடன் கூடிய ஆத ரவை வழங்கத் தீர்மானித்துள் ளோம். ஆனால், அரசில் எவ்வித பதவிகளையும் நாங்கள் பெற் றுக்கொள்ளவேண்டியதில்லை – என்றார்.

இங்கு கருத்து வெளியிட்ட தினேஸ் குணவர்தன,

ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமர் பதவியில் இருந்து நீக்கு வதற்காக நாங்கள் தற்காலிக மாக சு.க அமைக்கும் அரசுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள் ளோம் – என்றார்.

இதேவேளை, நேற்றுமுன் தினம் கொழும்பு விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கூடியே கூட்டு எதிரணியினர் சு.க அமைக் கும் அரசு ஆதரவளிக்கத் தீர்மா னித்திருந்தமை குறிப்பிடத்தக் கது. (ஐ)

## மைத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சுசில் பிரேமஜயந்தவின் ஏற்பாட்டில் ஜனாதிபதிக்கும் கூட்டு எதிரணிக்கும் இடையே நேற்று ஒழுங்கமைக்கப்பட் டிருந்த விசேட சந்திப்பை அடுத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனித்து அமைக்க நிபந்தனையற்ற பூரண ஆதரவை வழங்கத் தயாராக இருப்பதாக எதிரணி யின் முக்கிய தலைவர்கள் அறி வித்திருந்தனர்.

இதேவேளை, கொழும்பு விஜே ராம மாவத்தையில் அமைந் துள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இல்லத் தில் அவரை நேரில் சந்தித்துச் சமகால அரசியல் நிலைவரங்கள் மற்றும் சு.கவின் அரசை அமைக் கும் முறை தொடர்பில் சுசில் பிரேம ஜயந்த தெளிவுபடுத்தினார். தொடர்ந்து இரு தரப்புக்கும் இடை யில் தூதுப் புறாவாகப் பறந்து வரும் சுசில் பிரேமஜயந்தவின் நகர்வுகள் வெற்றியளித்துள்ள தால் கொழும்பு அரசியலில் அடுத்த கட்டமாக என்ன நடக் கும் என்று எதிர்வு கூற முடியாதுள் ளது. (ஐ)

## கூட்டரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்னெடுக்கப்படும் கூட்டு அரசு தொடர்ந்து ஆட்சியிலிருக் கும் என்றும் அறிவித்தார்.

இந்த நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ் தரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசை அமைக்க மும்முரமாக ஈடுபட்டுள்ளவரு மான அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவிடம் பிரதமரின் இந்த நிலைப்பாடு தொடர்பில் செய்தி யாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த அவர், பிரதமராக ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான கூட்டு அரசு நீடிக்காது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசை அமைக்க நாம் சகல நடவடிக் கைகளையும் எடுத்துள்ளோம் – என்றார். (ஐ)

## கட்சி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மன்ற உறுப்பினரும் புளொட் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன்.

உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைப்பதற்குப் பெரும் பாலான இடங்களில் எந்தக் கட் சிக்கும் அறுதிப் பெரும்பான்மை இல்லை. இதனால் சபைகளில் ஆட்சியமைப்பதற்குப் பல கட்சி களும் முனைப்புக் காட்டி வரு கின்றன. இதற்காக ஏனைய கட்சி உறுப்பினர்களைத் தம் பக்கம் இழுக்கும் நடவடிக்கைகளிலும் சிலர் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பாகக் கேட்ட போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் எந்த வொரு கட்சிக்கும் பல இடங் களில் பெரும்பான்மை கிடைக்க வில்லை. ஆனாலும் பெரும்பா லான இடங்களைப் பெற்ற கட்சி கள் அந்தந்தச் சபைகளில் ஆட்சியமைப்பதற்கான நடவடிக்கை களை முன்னெடுத்துள்ளன.

அதற்கமைய கூட்டமைப்பு பெரும்பான்மை பெற்ற இடங் களில் ஆட்சியமைப்பதற்குத் தீர்மானித்திருக்கின் றோம். இதற்கான ஆதரவை வழங்குமாறு நாங்கள் யாரிட மும் கேட்கவில்லை. ஆனாலும் மற்றக் கட்சிகள் பெரும்பான்மை பெற்ற இடங்களில் ஆட்சியமைப் பதற்கு நாங்கள் இடையூறாக இருக்கமாட்டோம்.

நாங்கள் இடையூறாக இல் லாது எவ்வாறு செயற்படுகின் றோமோ அதேபோன்று சில இடங்களில் பெரும்பான்மை பெற்ற மற்றக் கட்சிகளும் நாங் கள் பெரும்பான்மை பெற்ற இடங்களில் இடையூறாக இருக்க மாட்டார்கள் என்று நம்புகின் றோம்.

கூட்டமைப்பு பெரும்பான்மை பெற்ற இடங்களில் மற்றக் கட்சி கள் ஆட்சிமைப்பதற்காகக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் எவரேனும் ஆதரவளித்தல் அவரை உடனடியாகப் பதவி நீக்கம் செய்வதற்கும் தீர்மானித் திருக்கின்றோம் – என்றார். (ஐ–7)

# இ.தொ.காவின் பதவியிலிருந்து விலகினார் முத்து சிவலிங்கம்: தலைவராகவும் செயலாளராகவும் ஆறுமுகன் தொண்டமான்!




இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் பதவியிலிருந்து முத்து சிவலிங்கம் நீக்கப்பட்டு நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஆறுமுகன் தொண்டமான் தலைவர் மற்றும்செயலாளர்பொறுப்புகளை ஏற்றுக் கொண்டுள்ளார்.

அதேவேளை, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதிச் செயலாளர் பொறுப்பை மருதபாண்டி ரமேஷ்வரன் பெற்றுக்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கைத் தொழிலளார் காங்கிரஸின் நிர்வாக சபை மற்றும் தேசிய சபை ஒன்றுக் கூடல் கொட்டகலையில் அமைந்துள்ள தொண்டமான் தொழில்நுட்பக் கல்லூரியான சீ.எல்.எவ்வில் நேற்றுக் காலை இடம் பெற்றது.

காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் கூட்டப்பட்ட தேசிய சபை மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களால் இந்த நிர்வாக மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இதுவரை காலமும் காங்கிரஸின் தலைவராக செயல்பட்டு வந்த பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் மருத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தலைவர்பதவியிலிருந்துவிலகி கொள்கிறார்கள் எனத் தெரிவித்திருந்தார்.

அதேவேளை, அவருக்கு காங்கிரஸின் போசகராக பதவி வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு, நிதிக் காரியதரிசியாக மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சர் மருதபாண்டி ரமேஷ்வரனுக்கு வழங்க நிர்வாக சபை மற்றும் தேசிய சபை ஏக மனதாக ஏற்றுக்கொண்டு இந்த பதவியை வழங்கியுள்ளது.

காங்கிரஸின் பொது செயலாளராக இருந்த என்னை எதிர் வரும் காலங்களில் காங்கிரஸின் அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக தலைவர் மற்றும் செயலாளர் பதவிகளை வகிக்க வேண்டும் என நிர்வாக சபை மற்றும் தேசிய சபை ஊடாக ஏகமனதாக ஏற்றுக்கொண்டு பொறுப்புகளை வழங்கியதாக ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் சந்திப்பு ஒன்றை ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் நேற்று நடத்தினார்.

இந்த ஊடகசந்திப்பில் மத்திய மற்றும் ஊவா மாகாண தமிழ் கல்வி அமைச்சர்களான எம்ரமேஷ்வரன், செந்தில் தொண்டமான், உப தலைவர் கணேசமூர்த்தி, முன்னால் நாடாளுமன்ற உறுப்பினர் பி.ராஜதுரை, மத்திய மாகாண சபை உறுப்பினர்களான கண பதி கனகராஜ், ஏ.பி.சக்திவேல் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது ஆறுமுகன் தொண்டமான் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நுவரெலியா மாவட்டத்தின் உள்ளூராட்சி சபைகள் 11 ஐயும் கூட்டு இணைவோடு கைப்பற்றிக்கொண்டமை தொடர்பில் ஜனாதிபதியிடம் விவரித்தோம்.

அத்தோடு, எதிர்காலத்தில் நிதிகள் ஒதுக்கப்படுவதன் ஊடாக முன்னெடுக்கப்படும் வேலை திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடினோம்.

மேலும், மிக நீண்ட நாள்களாக பிரதி அமைச்சர் பதவியை பெற்றுக்கொள்ளுங்கள் என ஜனாதிபதியின் ஊடாக வலியுறுத்தப்பட்டு வந்தது. ஆனால், கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது ஜனாதிபதிக்கு எதிராக தேர்தல் செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தோம்.

இவருடன் இணைந்த பிறகு நாம் பதவிகளை பெற்றுக்கொள்வோம் என எண்ணியிருந்தோம். அதேவேளை, நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் இவருடன் இணைந்து பெரிய வெற்றிகளை பெற்றுக்கொண்டதனால் எமக்கு கிடைத்த இந்த பிரதி அமைச்சர் பதவியை பெற்றுக் கொண்டோம்.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## இலங்கை காப்புறுதித்துறையில் 15.53 சதவீதம் வளர்ச்சி!

கொழும்பு, பெப். 17

இலங்கை காப்புறுதித் துறையில் கடந்த வருட மூன்றாவது காலாண்டுப் பகுதியில் 15.53 சதவீதம் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இது 15ஆயிரத்து 862 மில்லியன் ரூபா அதிகரிப்பாகும்.

2017ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் இறுதி வரையி லான 9 மாத காலப்பகுதியில் நீண்டகால காப்புறுதி, பொதுவான காப்புறுதி நடவடிக்கைகள் மூலம் 1 லட்சத்து 18 ஆயிரத்து 16 மில்லியன்ரூபாபெறப்பட்டுள்ளது.

கடந்த 2016 ஆம் ஆண்டு இதே காலப்பகுதியில் ஒரு இலட்சத்து 2ஆயிரத்து 155 ரூபா பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா உள்ளூராட்சி சபைகளுக்கு தவிசாளர், பிரதி தவிசாளர்கள்!

## நியமித்தது கூட்டமைப்பு!

வவுனியா, பெப். 17

வவுனியா மாவட்டத்தில் உள்ள 5 உள்ளூராட்சி மன்றங்களில் தெற்கு சிங்கள பிரதேசசபை தவிர்ந்த 4 உள்ளூராட்சி மன்றங்களிலும் வெற்றியீட்டிய தமிழ் தேசியக்கூட்டமைப்பு அதன் தலைவர் மற்றும் துணை தவிசாளர்களை நியமித்துள்ளது.

தமிழரசுக் கட்சியின் வவுனியா அலுவலகமான தாயகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் மற்றும் வெற்றியீட்டிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களுடனான கலந்துரையாடலின் பின்னரே இந்த முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

தமிழரசுக்கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவினால் இப் பெயர் விவரங்கள் ஊடகங்களுக்கு அறிவிக்கப்படும்போது புளொட் அமைப்பின் தலைவர் த. சித்தார்த்தன், ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், வடமாகாண விவசாய அமைச்சர் க. சிவனேசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், வட மாகாண சபை உறுப்பினர் ப. சத்தியலிங்கம் ஆகியோர் உடனிருந்தனர்.

இதன் பிரகாரம் வவுனியா நகரசபையின் தலைவராக முதல் இரண்டு வருடங்களுக்கு நா.சேனாதிராஜாவும் அடுத்த இரண்டு வருடங்களுக்கு த. பரதலிங்கமும் தெரிவு செய்யப்பட்டுள்ளமையுடன், துணைத் தலைவராக சந்திரகுலசிங்கம் மோகன் தெரிவு செய்யப்பட்டார்.

வவுனியா தமிழ் தெற்கு தமிழ் பிரதேச சபையின் தலைவராக துரைசாமி நடராஜசிங்கம் (ரவி) இரண்டு வருடங்களுக்கும், தர்மலிங்கம் யோகராசா அடுத்த இரண்டு வருடங்களுக்கும் தெரிவு செய்யப்பட்டமையுடன் துணை தவிசாளராக முதல் இரண்டு வருடங்களுக்கு சிவப்பிரகாசம் சுப்பிரமணியமும் அடுத்த இரண்டு வருடங்களுக்குப் பூபாலசிங்கம் சந்திரபத்மனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, செட்டிகுளம் பிரதேச சபையின் தலைவராக சுப்பையா ஜெகதீஸ்வரன் இரண்டு ஆண்டுகளும் சிரில் நிருஜன் அடுத்த இரண்டு வருடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

துணைத் தவிசாளர்களாக சுப்பிரமணியம் அருள்கரன் இரண்டு வருடங்களுக்கும் முதல் இரண்டு வருடங்கள் தலைவராக செயற்பட்ட சுப்பையா ஜெகதீஸ்வரன் அடுத்த இரண்டு வருடங்கள் உப தலைவராக செயற்படுவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வவுனியா வடக்கு பிரதேசசபை தவிசா ளராக சபாரத்தினம் தணிகா சலம் இரண்டு வருடங்களுக்கும் சோமசுந்தரம் சத்தியேந்திரா அடுத்த இரண்டு வருடங்களுக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உப தவிசாளராக நாகலிங்கம் யோகராசா முதல் இரண்டு வருடங்களுக்கும் பொன் னையா தேவராஜா இறுதி இரண்டு வருடங்களுக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (க-100)

# ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், மிஹின்லங்கா விசாரணை ஆணைக்குழுவின் முதல் கூட்டம்

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், மிஹின் லங்கா மற்றும் ஸ்ரீலங்கன் கேட்டரிங் உள்ளிட்ட முறைகேடுகள் தொடர்பாக விசாரணை செய்யும் ஆணைக்குழு தனது முதலாவது கூட்டத்தை நடத்தியுள்ளது.

இந்த கூட்டம் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த ஆணைக்குழுவின் அங்கத்தவர்களுக்கான நியமனக்கடிதத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த புதன்கிழமை வழங்கியிருந்தார்.

ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி அனில் குணரத்ன இதன் தலைவராக செயற் படுகின்றார்.

ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ஈ.ஏ.ஜீ.ஆர். அமரசேகர, ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்க, ஓய்வுபெற்ற பிரதி கணக்காய்வாளர் நாயகம் எம்.டீ.ஏ. ஹரல்ட் மற்றும் இலங்கை கணக்கீட்டு, கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபையின் பணிப்பாளர் நாயகம் டபிளியு.ஜே. கே. கீகனகே ஆகியோர் ஏனைய உறுப்பினர்களாக செயற்படுகின்றனர்.

முதலாவது கூட்டத்தில் இந்தக் குழுவின் செயற்பாடு குறித்து கலந்துரையாடப்பட்டது. இந்த கூட்டத்தின் போது சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளும் பொலிஸாரும் இதில் கலந்து கொண்டனர்.

இவர்களுடனான ஒத்து ழைப்பு குறித்தும் இதன்போது ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# மைத்திரி - ரணிலுக்கு நேற்று மல்வத்து பீடாதிபதி கடிதம்

நாட்டின் அரசியல் நிலைவரம் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு விசேட கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார் மல்வத்து பீடாதிபதி திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கள தேரர். தேர்தலுக்குப் பின்னர் நாட்டில் எழுந்துள்ள அரசியல் ஸ்திரமற்ற நிலைவரம் தொடர்பில் அவசரமாகத் தீர்க்கமான முடிவொன்றை முன்னெடுக்குமாறு தேரர் அந்தக் கடிதத்தில் கேட்டுள்ளார். (ஐ)

# நீதிமன்றுக்கு அருகே ஒருவர் சுட்டுக்கொலை; சுட்டவரும் உயிரிழப்பு

கொழும்பு – புதுக்கடை நீதிமன்ற வளாகத்துக்கு அண்மையில் 39 வயதுடைய நபரொருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.


அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய வரை அப்பகுதியில் நின்ற மக்கள் மடக்கிப் பிடித்துத் தாக்குதல் நடத்தினர். அதனால் படுகாயமடைந்த அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 5.45 மணியளவில் இடம்பெற்றது.

துப்பாக்கிச் சூடு நடத்திய நபரை அப்பகுதி மக்கள் சுற்றி வளைத்துப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

மக்களின் தாக்குதலால் ஆயுததாரி படுகாயமடைந்தார். அவரைப் பொலிஸார் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்த்தனர். எனினும், சிகிச்சை பயனின்றி ஆயுதாரியும் உயிரிழந்தார்.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)


















இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.02.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.